සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST **முன்னோடி வினாத்தாள்** 1

**5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ..................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவுசெய்க.

1. 

(1) (2) (3)

2. 

(1) (2) (3)

- 3, 4 ஆகிய வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள மூன்று படங்களுடன் பொருந்துகின்ற படத்தைத் தெரிவுசெய்க.

3. 

(1) (2) (3)

4. 

(1) (2) (3)

சுட்டெண்: ...........................................

- பின்வரும் கவிதையை வாசித்து 5, 6 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

தலைசீவிப் பள்ளிக்கே ஓடு - நல்
தங்கப் பதுமையாம் தோழர்களோடு !
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! - அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

5. விலை மதிப்பற்ற பொருள் எது?

(1) தங்கப் பதுமை (2) பள்ளிக்கூடம் (3) கல்வி

6. கல்வியின் மூலம் எதைப் பெறலாம் எனப் பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார்?

(1) தோழர்களை (2) அறிவை (3) விலைமதிப்பற்ற பொருட்களை

- 7, 8 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோற்றும் உருவைத் தெரிவு செய்க.

7.



(1) (2) (3)

8.



(1) (2) (3)

9.



இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 15

- கீழுள்ள சொற்களையும் அவற்றுக்குச் சமனான இலக்கங்களையும் அவதானித்து அதற்கேற்ப 10, 11 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

**கன்னி** = 627 **முகவரி** = 9685 **வடம்** = 841

10. 'வணிகம்' என்னும் சொல்லைக் குறிக்கும் இலக்கங்களைச் சரியாகக் காட்டும் விடை

(1) 3861 (2) 8361 (3) 8136

11. 9782 என்பதற்குச் சமனான சொல் யாது?

(1) முடவன் (2) முனிவன் (3) கணவன்

12. உரு 1 இல் உள்ள செவ்வக வடிவக் கடதாசி, உரு 2 இல் உள்ளவாறும் பின்னர் உரு 3 இல் உள்ளவாறும் மடிக்கப்பட்டது. அதன்பின், உரு 3 இல் உள்ள நிழற்றிய பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டன. வெட்டிய பின், மீதிப் பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?



உரு 1 உரு 2 உரு 3



(1) (2) (3)

- △ + △ = □ எனவும் △ × △ = ○ எனவும் △ + □ = 12 எனவும்

தரப்பட்டுள்ளது. அதற்கமைய 13, 14 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

13. △ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 4 (2) 8 (3) 16

14. பெறுமானம் குறைந்ததில் இருந்து பெறுமானம் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் உருக்களை வரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் உரு எது?

(1) ○ (2) △ (3) □

15. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

 இற்கு  எனின்,  இற்கு .......................... ஆகும்



(1) (2) (3)

- கோலத்திற்கேற்ப 16, 17 ஆகிய வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

16. 


(1) 11 (2) 10 (3) 9

17. 

(1) 10 (2) 5 (3) 2

18. உரு A இல் உள்ள தராசினைப் பாருங்கள், அதில் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவை.



உரு A




உரு B

இதற்கேற்ப உரு B இல் உள்ள தராசின் இருபக்கங்களிலும் உள்ள நிறையைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த பக்கத்திற்குச் சேர்க்கப்பட வேண்டியதைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

19. 

இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான பகுதியைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

20. 

இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோற்றும் விதம் யாது?



(1)



(2)



(3)

21. 


தரப்பட்டுள்ள உருவில் -?- குறியினால் காட்டப்பட்டுள்ள நிரையில் இருக்க வேண்டிய குறியீட்டுக் கூட்டம் யாது?



(1) (2) (3)

22. 


இந்த உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) B A C D (2) D C B A (3) A B C D

23. மாம்பழம் ஒன்றை வாங்கும் விலைக்கு 3 விளாம்பழங்களை வாங்கலாம். அன்னாசிப்பழம் ஒன்றை வாங்கும் விலைக்கு 2 மாம்பழங்களை வாங்கலாம். ரூ. 100 இற்கு 5 விளாம்பழங்களை வாங்க முடியும் எனின், அன்னாசிப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) ரூ. 60 (2) ரூ. 100 (3) ரூ. 120

24. மோகனினதும் முரளியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்களாகும். மோகனின் வயது முரளியின் வயதின் நான்கு மடங்காக இருந்தது எனின், முரளியின் வயது எத்தனை வருடங்களாகும்?

(1) 10 (2) 9 (3) 8

25. உமக்கு வயது 8 வருடங்களாக இருந்த போது உமது தம்பியின் வயது உமது வயதின் அரைவாசியாக இருந்தது. உமக்கு இப்போது வயது 16 வருடங்கள் எனின், உமது தம்பியின் வயது எத்தனை வருடங்கள் ஆகும்?

(1) 8 (2) 10 (3) 12

26. பூம்பாத்தி ஒன்றின் நீளம், அதன் அகலத்தைப் போல் மூன்று மடங்காகும். பூம்பாத்தியின் சுற்றளவு 24 மீற்றர் எனின், அதன் அகலம் யாது?

(1) 2 மீற்றர் (2) 3 மீற்றர் (3) 6 மீற்றர்

27. தராசுகளில் காட்டப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளுக்கு ஏற்ப மூன்றாவது தராசில் உள்ள பொருட்களின் நிறை யாது?




1kg 850g 4kg 500g -?- ..................

(1) 5kg 100g (2) 5kg 300g (3) 6kg 300g

28. எழுத்துப் பிழைகளற்ற சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) சுறுசுறுப்பு, கண்காட்ச்சி, மகிழ்ச்சி

(2) விமானம், நூலகம், உட்சாகம்

(3) முயற்சி, ஆராய்ச்சி, கவிஞன்

● 29, 30 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச்சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

29. (1) சுத்தமான புதியதோர் சிறுவர்களாகிய நாம் உலகத்தை உருவாக்க உறுதிபூணுவோம்.

(2) சுத்தமான புதியதோர் உலகத்தை உருவாக்கச் சிறுவர்களாகிய நாம் உறுதி பூணுவோம்.

(3) சுத்தான உலகத்தை உருவாக்கப் புதியதோர் சிறுவர்களாகிய நாம் உறுதிபூணுவோம்.

30. (1) வீட்டையும் சூழலையும் வைத்து நுளம்புகள் பெருகுவதைத் தூய்மையாகத் தடுப்போம்.

(2) வீட்டையும் சூழலையும் தூய்மையாக நுளம்புகள் பெருகுவதை வைத்துத் தடுப்போம்.

(3) வீட்டையும் சூழலையும் தூய்மையாக வைத்து நுளம்புகள் பெருகுவதைத் தடுப்போம்.

31. நேற்றைக்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை எனின், நாளை மறுநாள் என்ன நாளாகும்?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

32. ஒரு குறித்த வருடத்தின் செம்பரம்பர் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். அம்மாதத்தின் கடைசி சனிக்கிழமை உட்பட எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும் விடுமுறை நாட்கள் எனின், அம்மாதத்தில் வரும் வேலை நாட்கள் எத்தனை?

(1) 22 (2) 24 (3) 25

33. ஒரு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்களினதும் மோட்டார் சைக்கில்களினதும் தயர்களின் மொத்த எண்ணிக்கை 28 ஆகும். அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கில்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 5 (3) 8

34. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் நான்கு சிவப்பு நிறப் பந்துகளும் நான்கு மஞ்சள் நிறப் பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான மூன்று பந்துகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

35. கடிகாரம் ஒன்று நேரம் 3.30 ஐக் காட்டும் போது கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையில் காணப்படும் கோணம்,

(1) ஒரு செங்கோணமாக இருக்கும்.

(2) ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கும்.

(3) ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும்.



[பக். 8 ஐப் பார்க்க

36. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவானது,

(1) முழு உருவின் சுற்றளவிலும் குறைந்தது.

(2) முழு உருவின் சுற்றளவுக்குச் சமனானது.

(3) முழு உருவின் சுற்றளவிலும் கூடியது.

37. இரு ஒற்றை எண்களைக் கூட்டிவரும் விடையை நான்கினால் வகுத்தபோது விடையாக ஓர் இரட்டை எண் கிடைத்தது. அவ்விரு எண்களும் எவை?

(1) 9, 5 (2) 7, 5 (3) 9, 7

38. சமச்சீர்க் கோடுகள் சரியாக வரையப்பட்டுள்ள உருவினைத் தெரிவுசெய்க.



(1)



(2)



(3)

39. ஓர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் பெப்ரவரி 27 ஆந் திகதி தொடக்கம் மார்ச் 2ஆம் திகதிவரை ஐந்து நாட்கள் நடைபெற்றன. இந்த விழா நடைபெற்றிருக்கக் கூடிய வருடம் எது?

(1) 2013 (2) 2016 (3) 2018

40. மிகவும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) தீக்குச்சிகள் அடுப்பு எரிக்கப் பயன்படுகின்றன.

(2) தீக்குச்சிகள் குப்பைகளை எரிக்கப் பயன்படுகின்றன.

(3) தீக்குச்சிகள் நெருப்பை உண்டாக்கப் பயன்படுகின்றன.

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 1

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ................................................

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

பல்வகையான மரஞ்செடிகொடிகள் எங்கும் பரம்பிக் காணப்படுவதால் எமது நாடு அழகு பெற்றுள்ளது. இந்த மரஞ்செடி கொடிகளுள் பெரும்பாலானவை எமக்கு உணவு, மருந்து என்பனவற்றைத் தருவதால் எமது வாழ்க்கைக்குத் துணையாகின்றன. விஷேட கவனஞ்செலுத்திப் பேணிக் காக்க வேண்டிய மரஞ்செடி கொடிகளும் உள்ளன. எனவே மரஞ்செடி கொடிகளின் இருப்புக்குப் பங்களிப்புச் செய்தல் எமது பொறுப்பாகும்.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) மரஞ்செடி கொடிகள் பரம்பிக் காணப்படுவதால் அழகு பெற்றிருப்பது எது?

: ..........................................................................................................

(ii) பெரும்பாலான மரஞ்செடி கொடிகள் எமக்கு எவற்றைத் தருகின்றன?

: ..........................................................................................................

(iii) எதற்குப் பங்களிப்புச் செய்தல் எமது பொறுப்பாகும்?

: ..........................................................................................................

(iv) 'துணையாகின்றன' என்பதைப் பிரித்து எழுதுக.

: ..........................................................................................................

(v) 'எழில்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: ..........................................................................................................

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

(1) மரஞ்செடிகொடிகளைப் பேணிக் காப்பதன் அவசியம்

(2) மரஞ்செடி கொடிகளின் அழகு

(3) எங்கும் பரம்பிக் காணப்படும் மரஞ்செடிகொடிகள்.

2. தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.

(i) அவன், **அல்லும்பகலும்** அயராது உழைத்தான்.

: ..........................................................................................

(ii) லூயி பாஸ்ட்டர் **கல்வி கேள்வி** நிரம்பப் பெற்றவர்.

: ..........................................................................................

3. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) கோலாட்டம் கரகாட்டம் கும்மி போன்றவை கிராமியக் கலைகளாகும்

(ii) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுமொழி

4. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) கள்வர் கூட்டம் தப்பி ................................ (ஓடியது / ஓடினர்)

(ii) மாணவியர்களின் நடன நிகழ்ச்சியோடு விழா ............................. (நிறைவு பெற்றது / நிறைவு பெற்றன)

(iii) மூதுரையில் நல்ல ஒழுக்க ............................... (நெறி / நெறிகள்) பல கூறப்பட்டுள்ளன.

சுட்டெண்: ..........................................

5. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) அவன் கோடாலியால் மரத்தை வெட்டினான்.

: ..........................................................................................................

(ii) தவறு செய்த மாணவன் வெக்கத்தால் தலை குனிந்தான்.

: ..........................................................................................................

6. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

காண / திறமையை / மோனாலிசா / முடியும் / ஓவியனின் / ஓவியத்தில்

..........................................................................................................

7. பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்க.

பொறுத்தார் ..........................................................................................................

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(பல்கலைக்களகம் / பல்கலைக்கழகம்)

9. பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பகுதியைக் குறிக்கும் சொல்லின் கீழ்க்கோடிடுக.

(சகாப்தம் / தசாப்தம்)

10. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் இரட்டைக்கிளவியை எழுதுக.

பூவிலிருந்து மணம் கமகம என்று வீசியது : ..........................................................

11. இணைமொழியைப் பூர்த்தி செய்க. சீரும் ......................................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Evening : ....................................

(ii) Parents : ....................................

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)  ....................................

(ii)  ....................................

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) closing / bag / I / my / am : ..........................................................................

(ii) you / live? / do / Where : ..........................................................................

15. (i) 'கி(க்)கிலி' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

..........................................................................................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

விலை என்ன? : ..........................................................................................

16. 5, 2, 6, 8 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி, ஆயிரத்தினிடத்தில் 6 உம் ஒன்றினிடத்தில் 5 உம் வரும் இரு எண்களை எழுதுக.

: ..........................................................

17. 10000 + 2000 + 200 + 30 + 1 என்பதால் வகை குறிக்கப்படும் எண்ணை எழுத்துக்களில் எழுதுக.

: ..........................................................................................................................

18. 8 இற்கும் 16 இற்கும் இடையில் உள்ள ஒற்றை எண்களை உரோமன் எண்குறிகளில் எழுதுக.

: ..........................................................

19. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

3405, 6712, 3450, 6127 : ..........................................................................

20. கீழேயுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் இடம்பெறும் பொருத்தமற்ற எண்ணைக் கண்டுபிடித்து எழுதுக.

(i) 2, 10, 15, 18, 26 : ..........................

(ii) 80, 50, 40, 20, 10 : ..........................

21. 110 புத்தகங்களை 7 மாணவர்களிடையே சமனாகப் பகிர்ந்தளித்தால் எஞ்சும் புத்தகங்கள் எத்தனை?

: ..........................................................

22. 12 பென்சில்கள் உள்ள பைக்கற் ஒன்றில் இருந்து $\frac{5}{6}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்கள் எத்தனை?

: ..........................................................

23. பயணிகள் புகையிரதமொன்று 11:28 மணிக்குப் பயணத்தைத் தொடங்கியது. அது, 2 மணித்தியாலம் 37 நிமிடங்களுக்குப் பின்னர் பயணத்தை முடித்தது. புகையிரதம் பயணித்து முடித்த நேரம் இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கங்களில் எழுதுக.

: ..........................................................

24. 

இந்த அட்டைத்தாளைப் புள்ளிக் கோடுகள் வழியே மடித்து நிறந்தீட்டப்பட்ட சிறிய கீலங்களைப் பொருத்தமானவாறு மடித்து ஒட்டுவதன் மூலம் திண்மப் பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டது.

(i) தயாரிக்கப்பட்ட திண்மப் பொருளின் பெயர் யாது?

: ..........................................................................

(ii) அத்திண்மத்திற்கு உள்ள நேர்விளிம்புகள் எத்தனை?

: ..........................................................................

25. 4kg 800g நிலக்கடலை 3 சமனான பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டது எனின், ஒரு பைக்கற்றின் நிறை, கிலோகிராம், கிராம் ஆகியவற்றில் எவ்வளவு?

: ......................kg .................. g

26. ஒரே வகையான 2 புத்தகங்களையும் 2 பயிற்சிக் கொப்பிகளையும் வாங்கிய லிசா கடைக்காரரிடம் ரூபாய் 500 ஐக் கொடுத்தாள். லிசாவுக்கு மீதிப்பணமாக ரூபாய் 110 கிடைத்தது.

(i) புத்தகங்கள் 2 ஐயும் பயிற்சிக்கொப்பிகள் 2 ஐயும் வாங்குவதற்கு லிசா செலுத்திய மொத்தப் பணம் எவ்வளவு?

: ..........................................................................

(ii) பயிற்சிக் கொப்பி ஒன்றின் விலை ரூபாய் 75 எனின், புத்தகம் ஒன்றின் விலை யாது?

: ..........................................................................

27. 

தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) நிழற்றிய பகுதியை ஒரு பின்னமாக எழுதுக.

: ..........................................................................

(ii) ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1*cm* உம் அகலம் 1*cm* உம் ஆகும். **நிழற்றப்படாத** பகுதியின் பரப்பளவு சதுரசென்ரி மீற்றரில் எவ்வளவு?

: ..........................................................................

28. 8 லீற்றர் 525 மில்லிலீற்றர் கொள்ளும் தாங்கி ஒன்றின் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டிருந்தது. அதில் மேலும் 2 லீற்றர் 775 மில்லிலீற்றர் நீரை ஊற்றிய போது தாங்கி முற்றாக நிரம்பியது. தாங்கியில் ஆரம்பத்திலிருந்த நீரின் கனவளவு யாது?

: ......................*l* ...........................*ml*

29. சந்தை ஒன்றில் மூன்று நாட்களில் விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பழவகை | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|
| கொய்யாப்பழம் | 18 | 27 | 15 |
| தோடம்பழம் | 8 | 16 | 9 |
| அன்னாசிப்பழம் | 28 | 18 | 5 |

(i) மூன்று நாட்களிலும் விற்கப்பட்ட தோடம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................................................................

(ii) செவ்வாய்க் கிழமை விற்கப்பட்ட எல்லாப் பழங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................................................................

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. ஆண்டு முழுவதும் பூக்கக் கூடியது,

(1) நந்தியாவட்டை (2) முள்முருக்கை (3) மரமுந்திரி (4) கொன்றை

31. மாலை நேரத்தில் மலர்வது

(1) கடுபுல் (2) அந்திமந்தாரை (3) தாமரை (4) நித்தியகல்யாணி

32. பின்வரும் மலர்களில் கொத்தாகப் பூப்பது
(1) காட்டுமல்லிகை (2) சூரியகாந்தி (3) அலரி (4) நித்தியகல்யாணி

33. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம்
(1) திப்பிலி (2) இருவேரி (3) புன்னை (4) சீதேவியார் செங்கழுநீர்

34. முற்றாக நீரினுள் அமிழ்ந்து வளரும் தாவரம்
(1) சல்வீனியா (2) வலிசுனேரியா (3) மூங்கில் (4) தாமரை

35. வளவைகங்கை கடலுடன் கலக்குமிடம்
(1) அம்பலாந்தோட்டை (2) யால
(3) காலி (4) மாத்தறை

36. இரண்டு மாவட்டங்களை **மாத்திரம்** கொண்டுள்ள ஒரு மாகாணம்
(1) வடமத்திய மாகாணம் (2) கிழக்கு மாகாணம்
(3) மேல்மாகாணம் (4) வடமாகாணம்

37. சூரியனுக்கு மிகச் சமீபமாய் அமைந்துள்ள கோள்
(1) சுக்கிரன் (2) புதன் (3) வியாழன் (4) சனி

38. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படத்தக்க நோய் **அல்லாதது**
(1) வாந்திபேதி (2) வயிற்றுளைவு (3) செங்கண்மாரி (4) மலேரியா

39. அபயவாவியைக் (பசவக்குளம்) கட்டுவித்த மன்னன்
(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பண்டுகாபயன் (4) தேவநம்பிய தீசன்

40. இரவு வானில் அவதானிக்க **முடியாதது**
(1) செய்மதி (2) எரிகற்கள் (3) உடுத்தொகுதி (4) வானவில்

41. கிழங்குப் பயிர்ச் செய்கைக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணிகள்
(1) பூனை, நாய் (2) எலி, பன்றி (3) பாம்பு, தவளை (4) சிலந்தி, கரப்பான்

42. ஊதா நிறத்தைப் பெற, கலக்க வேண்டிய நிறங்கள்
(1) நீலம், சிவப்பு (2) பச்சை, நீலம் (3) ரோஸ், வெள்ளை (4) சிவப்பு, மஞ்சள்

43. தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம்
(1) கறுப்பு (2) நீலம் (3) சிவப்பு (4) பச்சை

44. நீருடன் நன்கு கலக்கக் கூடிய திரவம்
(1) வினாகிரி (2) பெட்ரோல்
(3) தேங்காய் எண்ணெய் (4) மண்ணெண்ணெய்

45. இலங்கை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
(1) இந்தியாவிற்கு வடக்கில் அமைந்துள்ளது.
(2) ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது.
(3) இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.
(4) நாற்புறமும் கடலால் சூழப்பட்டது.


[பக். 7 ஐப் பார்க்க

46. எரிகாயத்திற்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது **செய்யக் கூடாதது**
(1) எரியுண்ட இடத்தைக் குளிர் நீரினால் குளிரூட்டல்
(2) எரியுண்ட இடத்தை மூடுதல்
(3) கொஞ்சம் கொஞ்சமாக நீர் அருந்தக் கொடுத்தல்
(4) எரிவின் மேல் எண்ணெய் அல்லது கொழுப்புக்களைப் பூசுதல்

47. வனைசில்லு பயன்படுத்தப்படும் கைத்தொழில்,
(1) கட்டிடக் கைத்தொழில்
(2) மட்பாண்டக் கைத்தொழில்
(3) விவசாயக் கைத்தொழில்
(4) மீன்பிடிக் கைத்தொழில்

48. பஸ்வண்டி ஒன்றில் ஏறி, இறங்கும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய சரியான ஒழுங்குமுறை எது?
(1) ஏறும்போது முன்பக்க வழியையும், இறங்கும்போது பின்பக்க வழியையும் பயன்படுத்தல்
(2) ஏறும் போது பின்பக்க வழியையும், இறங்கும் போது முன்பக்க வழியையும் பயன்படுத்தல்.
(3) ஏறவும் இறங்கவும் பின்பக்க வழியை மாத்திரம் பயன்படுத்தல்.
(4) ஏறவும் இறங்கவும் முன்பக்க வழியை மாத்திரம் பயன்படுத்தல்.

49. காந்தத்தினால் **கவரப்படாத** பொருள்
(1) செப்பு நாணயம் (2) தையல் ஊசி (3) சவர அலகு (4) இரும்பாணி

50. மின்காந்தத்தின் மூலம் செயற்படும் கருவி
(1) சைக்கில் தைனமோ
(2) திசையறிகருவி
(3) கைக்டிகாரம்
(4) மின்மணி

51. தேவாங்கு இரவைக் கழிப்பது
(1) உயர்ந்த மலைகளில்
(2) நிலத்தில் குழவான இடங்களில்
(3) தாவரங்களில்
(4) நீர் நிலைகளில்

52. நாகமரம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
(1) இளம் சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்குவது
(2) நான்கு இதழ்ப் பூக்கள் பூப்பது
(3) இலங்கையின் தேசிய அடையாளமாக விளங்குவது
(4) ஆணி வேர் இல்லாதது

53. கடதாசி ஒன்றில் பரப்பி வைக்கப்பட்ட குண்டூசிகளின் மீது, காந்தத் துண்டொன்றை வைத்து அங்குமிங்கும் அசைத்தபின்னர் காந்தத் துண்டு தூக்கிப் பார்க்கப்பட்டது. குண்டூசிகள் காந்தத்தால் கவரப்பட்டுள்ள முறையைச் சரியாகக் காட்டும் படம் எது?




(1) (2) (3) (4)

54. பின்வரும் எப்பொருளினூடாக மின்சாரம் கடத்தப்படும்?
(1) அரக்கு (2) இறப்பர் (3) இரும்பு (4) பொலிதீன்

55. நீருள்ள பாத்திரம் ஒன்றில் இடப்பட்ட பென்சில் ஒன்று தோன்றும் விதம் எது?



(1) (2) (3) (4)

56. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டுத் தொடரின் படிமுறைகளைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) உடலைத் தளர்த்தல், மனதைத்தளர்த்தல், பிரார்த்தனை, மனவுறுதி, மலர்வு

(2) உடலைத் தளர்த்தல், மனதைத் தளர்த்தல், மலர்வு, மனவுறுதி, பிரார்த்தனை

(3) உடலைத்தளர்த்தல், மனதைத்தளர்த்தல், மனவுறுதி, பிரார்த்தனை, மலர்வு

(4) மனதைத் தளர்த்தல், உடலைத் தளர்த்தல், மனவுறுதி, பிரார்த்தனை, மலர்வு

57. 

நீலநிறப் பலகையில் வெள்ளை நிற முக்கோணியினுள்ளே காட்டப்பட்டுள்ள இவ்வீதிக் குறியீடு வெளிப்படுத்துவது யாது?

(1) வேகமாகப் பாதையைக் கடவுங்கள்

(2) பாதையைக் கடத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது

(3) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்

(4) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்

58. தண்டுத்துண்டங்களை நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படும் தாவரம் **அல்லாதது**

(1) மரவள்ளி (2) முள்ளங்கி (3) வத்தாளை (4) பொன்னாங்கண்ணி

59. கேத்தல் ஒன்றில் நீர்இட்டு நன்கு வெப்பமேற்றியதன்பின்னர் கேத்தலின் மூக்கிற்கு அருகே பீங்கான் ஒன்றைப் பிடித்தபோது காணக்கூடியது யாது?

(1) பீங்கானின் நிறம் மாறும் (2) பீங்கானில் வெடிப்பு ஏற்படும்

(3) பீங்கானில் மாற்றத்தைக் காண முடியாது (4) பீங்கானில் நீர்த்துளிகள் காணப்படும்

60. மழை, சிலவேளைகளில் இலேசாகவும், சில வேளைகளில் கடுமையாகவும் பெய்வதுண்டு. மிகக் கடுமையாக மழைபெய்யும் போது இடம்பெறுகின்ற சில நிகழ்வுகள் எமக்குப் பெரும் பயத்தை ஏற்படுத்துகின்றன. "எனக்குப் பெரும் பயத்தை ஏற்படுத்திய பெருமழை" என்ற தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- ..........................................................................................................

  ..........................................................................................................

- ..........................................................................................................

  ..........................................................................................................

- ..........................................................................................................

  ..........................................................................................................

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST முன்னோடி வினாத்தாள் 2

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ..................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவுசெய்க.

1\. 

(1) (2) (3)

2\. 

(1) (2) (3)

3\. 

வெற்றுக் கட்டத்தினுள் வரவேண்டிய விடையைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

- 4, 5 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்துவரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

4\. 

(1) (2) (3)

5\. 

(1) (2) (3)

சுட்டெண்: .............................................

6. கீழுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருள்கள் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.



A B C D

(1) A, B உம் C, D உம்

(2) B, D உம் A, C உம்

(3) B, C உம் A, D உம்

7. கீழுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம். இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.



A B C D E F

(1) A, E உம் B, D உம் C, F உம்

(2) B, E உம் A, D உம் C, F உம்

(3) F, B உம் E, D உம் F, C உம்

8. கீழே தரப்பட்ட நான்கு உருக்களில் ஒன்று ஏனைய மூன்றிலும் இருந்து வேறுபட்டது. வேறுபட்ட உருவைக் குறிக்கும் எழுத்தைத் தெரிவு செய்க.



A B C D

(1) A (2) C (3) D

9. ஒக்டோபர் மாதத்தின் 18ஆம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தின் முதலாம் நாளையும் கடைசி நாளையும் முறையே காட்டும் விடை எது?

(1) வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை

(2) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

(3) வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

1 . 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16

(2) 18

(3) 14

11. 


அருகிலுள்ள உருவினால் காட்டப்படுவதைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) A - பழங்கள் B - மாம்பழங்கள் C - கொய்யாப்பழங்கள்

(2) A - தாவரங்கள் B - செடிகள் C - கொடிகள்

(3) A - பூக்கள் B - வெள்ளைநிறப்பூக்கள் C - மல்லிகைப்பூ

- 12, 13 ஆகிய வினாக்களில் முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

12. ............................ கண்மூடித்தனமாய் அழிக்கப்படுவதனால் ............................ தம் இருப்பிடங்களை இழந்து வருகின்றன.

(1) வயல்கள், விலங்குகள்

(2) தோட்டங்கள், மனிதர்கள்

(3) காடுகள், விலங்குகள்

13. உணவை ............................ ச் சமிபாடடையச் செய்வதற்குப் ............................ உதவி புரிகின்றன.

(1) மெதுவாக, பழங்கள்

(2) இலகுவாக, பழங்கள்

(3) இலகுவாக, பழக்கங்கள்

14. 300 கிராம் மாவினால் 6 பலகாரம் அல்லது 8 இட்லி அல்லது 10 இடியப்பம் செய்ய முடியும் எனின், 5 இடியப்பமும் 4 இட்லியும் 3 பலகாரமும் செய்யத் தேவையான மாவின் அளவு யாது?

(1) 150 கிராம் (2) 450 கிராம் (3) 900 கிராம்

15. நான்கு பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை 50 வருடங்கள் ஆகும். மூன்று வருடங்களுக்கு முன்னர், இவர்களில் மூன்று பேரின் வயதுகளின் கூட்டுத்தொகை 30 வருடங்கள் ஆகும் எனின், நான்காவது பிள்ளையின் தற்போதைய வயது யாது?

(1) 11 வருடங்கள்

(2) 17 வருடங்கள்

(3) 20 வருடங்கள்

- பின்வரும் விபரத்தை வாசித்து 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

முரளி காலையில் பாடசாலை செல்லும்போது அவனது நிழல் அவனின் வலப்பக்கமாக விழுந்தது.

16. விபரத்தின்படி முரளி எந்தத் திசையை நோக்கி நடந்தான்?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

17. முரளி மீண்டும் தனது வலப்பக்கமாகத் திரும்பி நடந்தான் எனின், அவனது நிழப் விழுவது.

(1) அவனின் வலப் பக்கம்
(2) அவனுக்குப் பின்னால்
(3) அவனுக்கு முன்னால்

- பின்வரும் கவிதையை வாசித்து 18, 19 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கதிரவன் கண் விழித்தான் - இனிய
காலை புலர்ந்தது பார்!
புதியதாய் இதழ் விரிக்கும் - வண்ணப்
பூ மணம் வீசுது பார்!

18. 'கதிரவன் கண்விழித்தான்' என்பதன் கருத்து யாது?

(1) பொழுது புலர்ந்தது.
(2) சூரியன் உதித்தது.
(3) மக்கள் நித்திரை விட்டெழுந்தனர்.

19. இக்கவிதை கூறுவது,

(1) பூக்கள் மணம் வீசுவது பற்றி
(2) காலைப் பொழுதின் அழகுபற்றி
(3) பூக்களின் வண்ண வண்ண இதழ்கள் பற்றி

- 20, 21 ஆகிய வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

20.  :  எனின்,  : ? ............................


(1)


(2)


(3)

21. நாளை : நேற்று எனின், புதன்கிழமை : ..........................

(1) வெள்ளிக்கிழமை

(2) திங்கட்கிழமை

(3) செவ்வாய்க்கிழமை

● 22, 23 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட சொல்லை நன்கு விபரிக்கும் கூற்றினைத் தெரிவுசெய்க.

22. பரம்பரை

(1) தலைமுறைத் தொடர்பு (2) தாய் தந்தையர் உறவு (3) குடும்ப உறவு

23. இரகசியம்,

(1) ஒரு சிலருக்கு மாத்திரம் தெரிந்த செய்தி

(2) குறிப்பிட்ட சிலரிடையே பரிமாறப்படும் செய்தி

(3) வெளிப்படுத்தக் கூடாத அந்தரங்கமான செய்தி

24. ஒரு சம்பவத்தின் ஐந்து சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A) அவர் எங்களை மைதானத்திற்குச் செல்லுமாறு கூறினார்.

B) நாங்கள் மகிழ்ச்சியுடன் மைதானம் நோக்கி ஓடினோம்.

C) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.

D) ஒரு பாடவேளை முழுவதும் விளையாடி மகிழ்ந்தோம்.

E) நாங்கள் எழுந்து நின்று வணக்கம் கூறினோம்.

மேலே தரப்பட்டுள்ள சம்பவத்தின் சரியான ஒழுங்குவரிசையைத் தெரிவு செய்க.

(1) C A B E D (2) C E A B D (3) B D E A C

25. உடற்பருமனின் ஒழுங்குமுறைப்படி பிராணிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க

(1) நுளம்பு, வீட்டு ஈ, கரப்பான், ஓணான்

(2) ஓணான், கரப்பான், நுளம்பு, வீட்டு ஈ

(3) கரப்பான், எறும்பு, ஓணான், வீட்டு ஈ

26. 

கூடுகளுக்குள்ளே உருக்கள் வரையப்பட்டுள்ள விதத்திற்கு ஏற்ப, வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.


(1)


(2)


(3)

27. 23 (84) 16
16 (59) 34
21 (..?..) 15

எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப (?) என்ற குறியிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(1) 27 (2) 62 (3) 72

- A, B, C, D எனத் தரப்பட்டுள்ள நான்கு அடைப்புக்களிலும் காணப்படும் உருக்களை அவதானித்து 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




28. குறைந்த வட்டங்களைக் கொண்ட அடைப்பிலிருந்து கூடிய வட்டங்களைக் கொண்ட அடைப்புவரை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை

(1) B D C A (2) C D B A (3) C B A D

29. + என்னும் உரு சம எண்ணிக்கையில் காணப்படும் இரு அடைப்புக்களும் எவை?

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) B உம் D உம்

30. மீனா வேலைக்குச் செல்வது, வாரத்தின் திங்கள், வியாழன், சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும். பாமா வேலைக்குச் செல்வது செவ்வாய், வியாழன், ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும். இதன்படி, இருவரும் ஒன்றாக வேலைக்குச் செல்லும் நாட்கள் எவை?

(1) புதனும் ஞாயிறும் (2) வெள்ளியும், புதனும் (3) திங்களும், வெள்ளியும்

31. கீழுள்ள எண்கோலத்தில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான இரு எண்களும் எவை?




(1) 48, 8
(2) 26, 26
(3) 32, 25

32. மணித்தியாலத்திற்கு 6 செக்கன்கள் பிந்தி ஓடும் கடிகாரம் ஒன்றில் காலை 8.00 இற்குச் சரியான நேரம் வைக்கப்பட்டால், மாலை 8.00 இற்கு இக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?

(1) மாலை 7.58 (2) மாலை 7.56 (3) மாலை 7.54

33. 


இந்தச் சதுரமுகி வடிவ மரக்குற்றியின் விளிம்பு ஒன்றின் நீளம் 9cm ஆகும். இதிலிருந்து சம அளவுடைய 27 சிறிய சதுரமுகிக்குற்றிகள் வெட்டி எடுக்கப்பட்டன. அவ்வாறு வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுர முகியின் விளிம்பு ஒன்றின் அளவு யாது?

(1) 2*cm* (2) 3*cm* (3) 4*cm*

34. ஒரு கிராமத்தில் சந்தை அமைந்திருப்பது வைத்தியாசலைக்கு வடக்கிலாகும். வைத்தியசாலை அமைந்திருப்பது கோயிலுக்கு வடக்கிலாகும். இதன்படி கோயில் இருப்பது சந்தைக்கு என்ன திசையிலாகும்?

(1) வடக்கு (2) தெற்கு (3) கிழக்கு

35. 7 ☐ 12 ☐ 43 ☐ 41

மூன்று வெற்றுக்கட்டங்களுக்கும் பொருத்தமான கணிதச் செய்கைக்குரிய குறிகள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) +, –, = (2) ×, –, = (3) = , + , –

36. 


தரப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்டு ஒரு சதுர முகியை அமைக்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

37. 7 இனால் மீதியின்றி வகுபடக் கூடியனவும் 3 இனால் மீதியின்றி வகுபட முடியாதனவுமான எத்தனை எண்கள் 11 இற்கும் 50 இற்கும் இடையே உள்ளன?

(1) 4 (2) 5 (3) 6

38. நாற்பது பேர் அமர்ந்திருந்த வரிசையொன்றின் வலப் புறத்திலிருந்து பார்த்தபோது கோபி 14 ஆவது இடத்தில் காணப்பட்டான். வரிசையின் இடப் புறத்திலிருந்து பார்க்கும் போது கோபி அமர்ந்திருப்பது எத்தனையாவது இடத்திலாகும்?

(1) 25 (2) 26 (3) 27

39. வாங்கு ஒன்றில் சில மாணவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள், இடப்பக்கமாகத் தொடங்கி ஒவ்வொருவராக 10, 20, 30, ............... என எண்ணிய போது மதுசா கூறிய எண் 50 ஆகும். வலப்பக்கமிருந்து அதேபோன்று எண்ணிய போது மதுசா கூறிய எண் 70 ஆகும். வாங்கில் அமர்ந்திருந்த மாணவர்கள் எத்தனை பேர்?

(1) 10 (2) 11 (3) 15

40. வாகீசன் தனது பதினோராவது பிறந்த நாளை நான்கு வருடங்களுக்கு முன்னர் கொண்டாடினான். அப்போது மகேசனின் வயது ஒரு வருடம் ஆகும். இதன்படி கூறக்கூடிய மிகச்சரியான கூற்று,

(1) இப்போது மகேசனின் வயது வாகீசனின் வயதின் அரைவாசியாகும்.

(2) இன்னும் ஐந்து வருடங்களில் வாகீசனின் வயது மகேசனின் வயதின் இருமடங்காகும்.

(3) இப்போது வாகீசனின் வயது மகேசனின் வயதின் நான்கு மடங்காகும்.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

# முன்னோடி வினாத்தாள் 2

**5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

## வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ...................................................

### பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- ✳ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ✳ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
- ✳ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- ✳ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ✳ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
- ✳ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

கிராமம் முழுவதும் கடுமையான வரட்சி நிலவியது. பயிர்பச்சைகளும் பெரிய விருட்சங்களும் காய்ந்து கருகிக் கிடந்தன. சேனைகளில் காணப்படும் வெருளிகள் போல, மரங்கள் தோற்றமளித்தன. விட்டுவிட்டு வீசுகின்ற அனல் காற்றினால் மக்கள் அவதிப்பட்டனர். சலசலவென ஓடுகின்ற அருவி, தாமரை மலர்கள் பூத்து மணம் பரப்பும் குளம் என்பன வற்றிக் கிடந்தன. இது, கிராமத்தவர்களுக்கு வேதனையைக் கொடுத்தது. இனியாவது மழை பெய்யாதா என்ற ஏக்கத்துடன் கிராமத்து மக்கள் வாடிக்கிடந்தனர்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) கிராமத்தவர்களின் வேதனைக்குக் காரணமான இயற்கை இயல்பு எது?

: ......................................................................................................................

(ii) மக்கள் எதனால் அவதிப்பட்டனர்?

: .....................................................................................

(iii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் இரண்டையும் எழுதுக.

: ...................................... , ......................................

(iv) வெருளிகள் போல் தோற்றமளித்தவை எவை?

: .....................................................................................

(v) 'வாசம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

: .....................................................................................

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

(1) வரட்சியால் வற்றிப்போன அருவியும் குளமும்

(2) கிராமத்தில் வீசும் அனல் காற்றின் அகோரம்

(3) வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராமத்தின் அவல நிலை

2. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) கண்ணாயிருத்தல்

: ..........................................................................................................

(ii) விட்டுக்கொடுத்தல்

: ..........................................................................................................

3. சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) கருமுகிற் கூட்டம் வானை (நிறைத்திருந்தது / நிறைத்திருந்தன)

(ii) எனக்குப் பல புத்தாண்டு வாழ்த்திதழ்கள் (கிடைத்தது / கிடைத்தன)

4. குமரனை மக்கள் **புகழ்ந்து** பேசினார்கள். **புகழ்ந்து** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

: ......................................................

5. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) இளம் பிராயம் / இளம் பராயம்

(ii) கைராட்டினம் / கைறாட்டினம்



[பக். 3 ஐப் பார்க்க

6. தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(i) கடவுள் இல்லையென்று வாதிடுபவன் : ..................................................

(ii) எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா : ..................................................

7. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

அவர் தம் பெருமை என்னே என்னே

8. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியில் எழுதுக.

மருந்து குடித்ததால் காச்சல் குணமானது.

: ..................................................................................................................

9. வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) இன்னல், துன்பம், உவகை.

(ii) புனிதம், களங்கம், தூய்மை

10. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

சீரைத் தேடின் ..................................................................................................................

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) மழை : ..................................................

(ii) வகுப்பறை : ..................................................

12. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

I am thirsty : ..................................................................................................................

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

கவனமாக இருங்கள் : ..................................................................................................

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) is / work / that / good : ..................................................................................

(ii) to / flowers / pluck / want / I : ..................................................................................

15. (i) 'புஸ்தகாலய' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

..................................................................................................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

அம்மா வீட்டுக்கு வருகிறார் : ..................................................................................

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

16. 


இந்த எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

: ........................................................

17. சமனான அடிகளைக் கொண்ட 4 முக்கோணிப் பக்கங்களினால் **மாத்திரம்** ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் என்ன?

: ........................................................

18. உரோமன் எண்குறிகளை இந்து அராபிய இலக்கத்தில் எழுதுக.

(i) XII. : ..............................  (ii) XIV : ..............................

19. ஒரு வாளியில் 6 லீற்றர் 450 மில்லிலீற்றர் நீர் இடப்படலாம். இப்போது அதில் 4 லீற்றர் 950 மில்லிலீற்றர் நீர் உள்ளது. அதனை நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு நீர் தேவை?

: .........................*l*..............................*ml*

20. உருவைக் கொண்டு கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.



(i) உருவில் நிழற்றிய பகுதியை ஒரு பின்னமாக எழுதுக.

: ....................................................

(ii) **நிழற்றாத** பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

: ....................................................

(iii) ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் $1cm$ உம் அகலம் $1cm$ உம் ஆகும். நிழற்றிய பகுதியின் பரப்பளவு சதுர சென்ரிமீற்றரில் எவ்வளவு?

: ....................................................

21. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

2099, 897, 3809, 7001 : ........................................................

22. குவியல் ஒன்றிலிருந்த மாம்பழங்களை நான்கு சம குவியல்களாகப் பகிர்ந்த போது குவியலொன்றில் 32 மாம்பழங்கள் இருந்ததோடு, மீதியாக 3 மாம்பழங்களும் இருந்தன. ஆரம்பத்திலிருந்த மொத்த மாம்பழங்கள் எத்தனை?

: ........................................................

23. பாடசாலை ஒன்றில் 1156 ஆண் பிள்ளைகளும் 1260 பெண்பிள்ளைகளும் உள்ளனர். ஆண் பிள்ளைகளை விட எத்தனை பெண் பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்?

: ........................................................



[பக். 5 ஐப் பார்க்க

24. பின்வரும் பின்னங்களில் மிகச்சிறிய பின்னத்தைத் தெரிவுசெய்து எழுதுக.

$\frac{1}{3}$ , $\frac{1}{2}$ , $\frac{4}{6}$ : ..............................................

25. வியாபாரி ஒருவரிடமிருந்த தேங்காய்களில் $\frac{1}{3}$ ஐ விற்ற பின்னர் 510 தேங்காய்கள் எஞ்சியிருந்தன..

(i) வியாபாரியிடமிருந்த தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..............................................

(ii) விற்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

: ..............................................

26. காலை பத்துமணி முப்பது நிமிடத்திற்கு ஆரம்பித்த பாடசாலைக் கலை நிகழ்ச்சிகள் 3 மணித்தியாலம் 45 நிமிடத்திற்குப் பின்னர் முடிவடைந்தது. கலைநிகழ்ச்சிகள் முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

: ..............................................

27. 


(i) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

: ..............................................

(ii) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

: ..............................................

28. பிள்ளையொன்று A என்னும் இடத்திலிருந்து 15$m$ கிழக்கு நோக்கிச் சென்று, அதன்பின் அவ்விடத்திலிருந்து தனது வலப்பக்கத்திற்குத் திரும்பிமீண்டும் 15$m$ சென்று B என்னும் இடத்தை அடைந்தது. A அமைந்திருப்பது B இற்கு எத்திசையிலாகும்?

: ..............................................

29. ஒரு பயிற்சிக் கொப்பியின் விலை ரூ. 35 உம் ஒரு பேனாவின் விலை ரூ. 12 உம் ஆகும்.

(i) 4 பயிற்சிக் கொப்பிகளையும் 2 பேனாக்களையும் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு?

: ..............................................

(ii) 4 பயிற்சிக் கொப்பிகளையும் 2 பேனாக்களையும் வாங்கிய மோகனா, கடைக்காரருக்கு ஒரு குறித்த தொகைப் பணத்தைக் கொடுத்தபோது மோகனாவுக்கு மீதியாக ரூ. 36 கிடைத்தது. மோகனா கடைக்காரருக்குக் கொடுத்த குறித்த தொகைப் பணம் எவ்வளவு?

: ..............................................

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. மருந்தாகப் பயன்படுத்தப்படும் வித்துவகை

(1) கடலை (2) தேங்காய் (3) பலா (4) கொத்தமல்லி

31. கையால் தொடும்போது வெடித்துப் பரம்பலடையும் வித்து

(1) துத்திரி (2) மரமுந்திரிகை (3) எண்ணெய் (4) காசித்தும்பை

32. பின்வருவனவற்றில் இலங்கை மின்சார சபையைக் குறிக்கும் உருவக் குறியீடு



(1) (2) (3) (4)

33. பயிர்த் தாவரங்களைச் சேதப்படுத்தும் எலிகளை உணவாக உட்கொள்ளும் விலங்கினம்
(1) தவளை (2) ஓணான் (3) பாம்பு (4) செண்பகம்

34. கலாவாவியைக் கட்டுவித்த மன்னன்
(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பண்டுகாபயன் (4) தேவநம்பிய தீசன்

35. 
இம்மலர்,
(1) நாகமலர் (2) நீலோற்பலம்
(3) அலறி (4) நந்தியாவட்டை

36. வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவோர்
(1) கிறிஸ்தவர் (2) பௌத்தர் (3) இந்துக்கள் (4) முஸ்லிம்கள்

37. தையல் வேலையின் போது பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்
(1) கத்திரிக்கோல் (2) கையுறை (3) ஊசி (4) தீதாள்

38. இலங்கை மக்களிடையே தேசாபிமானத்தை வளர்க்கும் வகையில் கவிதை நூல்களை வெளியிட்ட பெரியார்,
(1) வண. எஸ். மஹிந்த (2) ஆனந்த ராஜகருணா
(3) குமாரதுங்க முனிதாஸ (4) ஆனந்த சமரகோன்

39. உபகரணங்கள் இன்றி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு
(1) சடுகுடு (2) தாயம் போடுதல் (3) பல்லாங்குழி (4) கிட்டிப்புள்

40. ஒளியை விரும்பாத பிராணிகள்
(1) வீட்டு ஈ, தேனீ (2) வெட்டுக்கிளி, வீட்டு ஈ
(3) சிலந்தி, தேனீ (4) நத்தை கரப்பான்

41. பெருந்தெரு ஒன்றில், ஒருதிசைவழியே பயணித்துக் கொண்டிருந்த வாகனங்கள் வீதி ஒளிச்சமிக்ஞைக் கம்பத்திலிருந்த நிறமின்விளக்கொன்று ஒளிர்ந்ததனால் நிறுத்தப்பட்டன. கம்பத்தில் ஒளிர்ந்த நிறமின்விளக்கைச் சரியாகக் காட்டும் படம் எது?



(1) (2) (3) (4)

42. நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பான இடமாக அமைவது
   (1) நீர்வடிந்தோடும் வடிகான்
   (2) கவிழ்த்துப் போடப்பட்ட இளநீர்க் கோதுகள்
   (3) நீருடன் உப்புக்கட்டிகள் இடப்படும் பூச்சாடி
   (4) நீர் தேங்கி நிற்கும் தகரப்பேணி

43. 
இந்த உபகரணத்தின் பயன்பாடு யாது?
   (1) பலகையை அழுத்தமாக்கல்   (2) பலகையில் துளையிடல்
   (3) பலகையில் நேர்கோடொன்றை வரைதல்   (4) பலகையில் குழிகுடைதல்

44 வித்தை அகற்றிய பின்னர் உணவுக்கு எடுக்கப்படும் காய்கள்,
   (1) புடோல், பூசணி   (2) சிறகவரை, பாகல்
   (3) வெண்டி, போஞ்சி   (4) அவரை, பப்பாசி

45. இலங்கைத் தேசிய இலச்சினை பற்றிய சரியான கூற்று,
   (1) நிறைகுடத்தின் இருபுறமும் அரசஇலைகள் உள்ளன.
   (2) பூவிதழ்களால் சூழப்பட்டபடி நெற்கதிர்கள் உள்ளன.
   (3) இலச்சினையின் உச்சியில் சூரியனும் சந்திரனும் உள்ளன.
   (4) சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் நிறைகுடம் உள்ளது.

46. சோயாப்பாலில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்,
   (1) புரதம்   (2) காபோவைதரேற்று   (3) விற்றமின்   (4) உப்பு

47. பயணித்துக் கொண்டிருக்கும் வாகனத்தின் தடையை மிதிக்கும் போது எரியும் விளக்கின் நிறம்
   (1) செம்மஞ்சள்   (2) சிவப்பு   (3) மஞ்சள்   (4) ஊதா

48. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்,
   (1) குமாரதுங்க முனிதாஸ   (2) ஆனந்த சமரகோன்
   (3) டி.எஸ். சேனாநாயக்க   (4) வண.எஸ். மஹிந்த

49. கண்கள் காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறத்தக்க இலத்திரனியல் ஊடகம்,
   (1) தொலைக்காட்சி   (2) தொலைபேசி   (3) அரங்கு   (4) வானொலி

50. உப்பிட்டுப் பேணப்படும் உணவு
   (1) பலாக்காய்   (2) மாங்காய்   (3) பனங்கிழங்கு   (4) பனம்பழம்

51. பயிர்ச் செய்கையில் விவசாயிக்கு உதவும் விலங்கு,
   (1) பனிப்பூச்சி   (2) மண்புழு   (3) தண்டுகோதி   (4) ஏபிட்டு

52. தெறியோட்டையைத் தைக்கும்போது பயன்படுத்தும் தையல் முறையைக் காட்டும் உரு,


(1)


(2)


(3)


(4)

53. 'வெஹரகல' அணைக்கட்டின் படம் அச்சிடப்பட்டுள்ள இலங்கைக் காசுத்தாள் எது?
(1) ரூபாய் 20 (2) ரூபாய் 50 (3) ரூபாய் 1000 (4) ரூபாய் 5000

54. மண்ணினுள் சேரும் பின்வரும் பொருள்களில் **உக்காதது**,
(1) பொலிதீன் (2) சிரட்டை (3) சீலைத்துண்டு (4) கடதாசி

55. உப்புத்தூள் விரைவாகக் கரைவது,
(1) குளிரூட்டிய நீரில் (2) கொதித்தாறிய நீரில்
(3) தண்ணீரில் (4) வெந்நீரில்

56. தண்டுத் துண்டங்களை நடுவதன் மூலம், கன்றுகள் பெறப்படத்தக்க பயிர் வகைகள்,
(1) உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு (2) வற்றாளை, பொன்னாங்கண்ணி
(3) முள்ளங்கி, பசளி (4) பீற்றூட், தக்காளி

57. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தும் உபகரணங்கள் **மாத்திரம்** அடங்கிய விடை
(1) குப்பைவாரி, கலப்பை, வனைசில்லு
(2) செக்கு, பட்டடை, பூட்டாங்கயிறு
(3) முள்ளு, குப்பைவாரி, மண்வெட்டி
(4) மண்வெட்டி, உலைத்துருத்தி, முளைக்குச்சி

58. மஞ்சட் காமாலை நோய் ஏற்படக் காரணமாக அமைவது
(1) அசுத்த நீரைப் பருகுதல் (2) விசர் நாய் கடித்தல்
(3) நுளம்பு குத்துதல் (4) ஈக்கள் மொய்த்த உணவை உண்ணுதல்

59. ஒற்றுமையாகச் செயற்பட்டு, பாரமான உணவுகளைக்கூடக் காவிச்செல்லும் விலங்கினத்திற்கு உதாரணம்
(1) கரப்பான் (2) சிலந்தி (3) எறும்பு (4) தும்பி

60. பறவைகள், மிருகங்களிடத்தே நாம் அன்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அவற்றின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் இடையூறு ஏற்படுத்துவது நல்ல பழக்கமாகாது. "பறவைகள் மிருகங்களைத் துன்புறுத்தக் கூடாது" என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- ....................................................................................................
....................................................................................................
- ....................................................................................................
....................................................................................................
- ....................................................................................................
....................................................................................................

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

# முன்னோடி வினாத்தாள் 3

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

## வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ..................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

E. அமுதனால் பந்தைத் தடுக்க முடியவில்லை.

(1) CDAEB (2) BCDAE (3) ADCBE

8. A. அவள் மரக்கறிப் பையுடன் பாதைக்கு வந்தாள்

B. அந்த முச்சக்கர வண்டியில் ஏறி வீடு சென்றாள்

C. அமுதா சந்தைக்குச் சென்றாள்

D. பாதையில் வந்த முச்சக்கர வண்டியை நிறுத்தினாள்

E. பை நிறைய மரக்கறிகள் வாங்கினாள்.

(1) ECBAD (2) DCBEA (3) CEADB

● 9, 10 ஆகிய வினாக்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

9.






(1) (2) (3)

10.






(1) (2) (3)

- 11, 12 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் பிழயாகக் கையாளப்பட்டுள்ளது. அச்சொல்லைத் தெரிவுசெய்க.

11. அடர்ந்த மரங்களால் நிறைந்திருந்த, உயர்ந்த வனத்தினூடாக அந்த நீண்ட ஆறு பாய்ந்து செல்கிறது.

(1) அடர்ந்த (2) உயர்ந்த (3) நீண்ட

12. நறுமணம் வீசிய தோட்டத்துப் பூக்களைச் சுற்றி, தேனீக்கள் இரைந்தபடி பறந்து கொண்டிருந்தன.

(1) வீசிய (2) சுற்றி (3) இரைந்தபடி

13. ரவியை விட, ரகு ஒருவருடம் மூத்தவன். ரகுவைவிட மது இரண்டு வருடங்கள் மூத்தவன். இம்மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 16 வருடங்கள் எனின், ரகுவின் வயது எத்தனை வருடங்கள்?

(1) 3 (2) 4 (3) 5

14. ஒரு வகுப்பில் உள்ள ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து மடல்களை அனுப்பிக் கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 20 (3) 25

- உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிறமை பூசப்பட்ட ஒரு திண்மமரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை, கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



15. வெட்டப்பட்ட பின்னர் கிடைத்த சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 16 (2) 18 (3) 27

16. கிடைத்த சிறிய சதுர முகிகளில் மூன்று பக்கங்களுக்கு நிற மை பூசப்பட்டவை எத்தனை?

(1) 4 (2) 8 (3) 12

17. கீழுள்ள அடைப்புக்குள் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஒரு முழு எண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்கள் நிரையாகவும் நிரலாகவும் காட்டப்பட்டுள்ளதை அவதானியுங்கள்.




இதன்படி △ + □ + ⊡ இன் பெறுமானம் யாது?

(1) 18

(2) 19

(3) 20

- 18, 19 ஆகிய வினாக்களில் சொற்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

18. கம்பம் பதினாறு → பதிகம்
கணிதம் பலசாலி → பலகணி
தம்பம் மந்திரி → ......................

(1) பந்தம் (2) மந்தம் (3) தந்தம்

19. வளம் சரம் திடம் → வசதி
பந்து துறவி மையம் → பதுமை
சந்து கத்தி திறமை → ......................

(1) கதிரை (2) திகதி (3) சகதி

- 20, 21 ஆகிய ஒவ்வொரு வினாவின் உருவிலும் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

20. 


(1) 12 (2) 31 (3) 35

21. 


(1) 3 (2) 5 (3) 7

22. ரோசாப்பூக்கள், பூக்கள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினைச் சரியாகக் காட்டும் உரு எது?




(1)




(2)




(3)

23. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 14



[பக். 6 ஐப் பார்க்க

- 24, 25 ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடங்கள் A இலும் B இலும் வரவேண்டிய விடைகளை முறையே தெரிவு செய்க.

24. முரசு, சுரபி, பிரபு, .............A............. , .............B............. , குரவு.

(1) பிரதி, திருகு (2) புரவி, விரகு (3) புலரி, குளவி

25. 123, 234, .............A............. 456, .............B............. 678

(1) 345, 546 (2) 345, 567 (3) 324, 423

26. தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) மரங்கள் அசைந்தால் காற்று வீசும்.

(2) காடுகளை அழித்தால் வரட்சி நீங்கும்.

(3) நீரை அருந்தினால் தாகம் தீரும்.

27. 'அமுதா தினமும் நூலகத்திற்குச் செல்லத் தவறுவதே இல்லை.' இந்த வாக்கியத்தின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) அமுதா தினமும் நூலகம் செல்வது தவறானதல்ல.

(2) அமுதா தினமும் நூலகம் செல்வாள்.

(3) அமுதா தினமும் நூலகம் செல்வதைத் தவறாகக் கருதுவதில்லை.

- பின்வரும் தகவல்களைக் கொண்டு 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

2 மாம்பழங்களினதும் 1 அப்பிள் பழத்தினதும் விலை ரூ. 65 ஆகும்.

1 மாம்பழத்தினதும் 1 அப்பிள் பழத்தினதும் விலை ரூ. 50 ஆகும்.

28. ஒரு மாபம்பழத்தின் விலை யாது?

(1) ரூ. 20 (2) ரூ. 15 (3) ரூ. 12

29. ஒரு அப்பிள் பழத்தின் விலை யாது?

(1) ரூ. 40 (2) ரூ. 35 (3) ரூ. 30

30. ஒரு குழுவில் உள்ள 8 பேர்களிடையே, ஆண்தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 2 கொடிகளும் பெண் தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 3 கொடிகளும் இருந்தன. கொடிகளின் மொத்த எண்ணிக்கை 19 எனின், குழுவில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

31. 20 தொடக்கம் 30 வரையான எண்ணும் எண்களில் உள்ள மூன்றின் மடங்குகளின் எண்ணிக்கையையும் நான்கின் மடங்குகளின் எண்ணிக்கையையும் முறையே காட்டும் விடை எது?

(1) 4, 3 (2) 4, 4 (3) 3, 4



[பக். 7 ஐப் பார்க்க

32. இன்னும் 8 வருடங்களின் பின், மகனின் வயது அப்பாவின் வயதின் அரைவாசியாக இருக்கும். இப்போது அப்பாவின் வயது 62 வருடங்கள் எனின், மகனுக்கு இப்போது வயது யாது?

(1) 43 வருடங்கள் (2) 35 வருடங்கள் (3) 27 வருடங்கள்

- கீழுள்ள கவிதையை வாசித்து 33, 34 ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

காலைக் கதிரவன் கண்விழிக்க - புதுக்
கானம் இசைத்தன பறவை இனம்!
சோலைப் பூக்கள் இதழ் விரிக்க - குளிர்
காற்றில் பரவுது இனிய மணம்!

33. பூக்கள் மலர்ந்ததும் இடம் பெற்ற நிகழ்வு யாது?

(1) பறவைகள் கானம் இசைத்தமை
(2) கதிரவன் கண் விழித்தமை
(3) குளிர் காற்றில் மணம் பரவியமை

34. காலையில் நடைபெறும் ஆனால், கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் எது?

(1) கீழ்வானம் சிவத்தல்.
(2) பூக்கள் மலர்தல்.
(3) சூரியன் உதித்தல்.

35. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.

இது கண்ணைக் கவரும் அழகுமிக்க பிரதேசம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று மரங்களும் செடிகளும் கொடிகளும் ......................(a) காணப்படுகின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரைப் பரந்த வயல்களும் தென்னந் தோப்புகளும் மனதை ..................(b) காட்சிகளாக விளங்குகின்றன.

பந்தியில் (a), (b) ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) படர்ந்து, அசைக்கும்
(2) நிறைந்து, மயக்கும்
(3) உயர்ந்து, நினைக்கும்

36. 50 தொடக்கம் 59 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 10 (3) 11

● 37, 38 ஆகிய வினாக்களில் முகம் பார்க்கும் கண்ணாடியில் தோன்றும் கடிகார முகங்கள் தரப்பட்டுள்ளன. அக்கடிகாரங்கள் காட்டும் உண்மை நேரத்தைத் தெரிவு செய்க.

37. 

(1) பி.ப. 4.00

(2) பி.ப 8.00

(3) பி.ப 11.00

38. 

(1) பி.ப 3.25

(2) பி.ப 8.35

(3) பி.ப 3.35

39. வரதன் தன்னிடமிருந்த 10 மாம்பழங்களையும் ரூ. 50 ஐயும் சாந்தனிடம் கொடுத்து அவனிடமிருந்து ஒன்று ரூ. 4 பெறுமதியான 50 கொய்யாப் பழங்களை வாங்கினான். வரதன் வைத்திருந்த மாம்பழம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட பெறுமானம் எவ்வளவு?

(1) ரூ. 10 (2) ரூ. 15 (3) ரூ. 20

40. பென்சில் ஒன்று ரூ. 3 உம் பேனை ஒன்று ரூ. 8.50 உம் அழிறப்பர் ஒன்று ரூ. 2.50 உம் ஆகும். ரூ. 22.50 ஐ வைத்திருக்கும் ஒருவர் முழுப் பணத்தையும் செலுத்தி வாங்கக் கூடிய பொருட்கள் எவை?

(1) பென்சில் - 2, பேனை - 1, அழிறப்பர் - 2

(2) பென்சில் - 1, பேனை - 2, அழிறப்பர் - 1

(3) பென்சில் - 3, பேனை - 1, அழிற்றபர் - 1

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 5

**5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ..................................................

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

லூயிபாஸ்ட்டர் என்பவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார். பாஸ்ட்டர் கல்விகேள்விகளிற் சிறந்து விளங்கி விஞ்ஞானப் பட்டம் பெற்றார். பாஸ்ட்டர் எதனையும் ஆராயும் இயல்பையும் சிந்தனைத் திறனையும் கொண்டவர். காற்றில் நுண்ணுயிர்கள் பல உள்ளன. அவையே நொதித்தல், அழுகல், பழுதடைதல் ஆகியவற்றுக்குக் காரணம் எனக் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) லூயிபாஸ்ட்டர் பெற்றுக் கொண்ட பட்டம் எது?

: ..........................................................................................

(ii) பாஸ்ட்டர் எவ்வியல்பையும் எத்திறனையும் கொண்டவர்?

: ..........................................................................................

..........................................................................................

(iii) நொதித்தல், அழுகல், பழுதடைதல் ஆகியவற்றுக்குக் காரணமானவை எவை?

: .................................... , ......................................

(iv) 'இகழ்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: ..........................................................................................

(v) பழுதடைதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

: ..........................................................................................

(vi) பந்தியில் குறிப்பிடப்படும் இணைமொழியை எழுதுக. : ......................................

2. தடித்த எழுத்தில் உள்ள சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.

(i) நம்மை நம்பியவர்களை **நட்டாற்றில்விடல்** தர்மம் ஆகாது.

: ..........................................................................................

(ii) மாதவன் வியாபாரத்தில் முன்னேறுவதை அறிந்த சிலர் **வயிற்றெரிச்சல்** அடைந்தனர்.

: ..........................................................................................

3. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) மதிய போசணம் / மதிய போசனம்

(ii) அரண்மனை / அரன்மணை

4. சரியான வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) மேசையில் புத்தகமும் பத்திரிகையும் (கிடந்தது / கிடந்தன)

(ii) உண்டியலுக்குள் நாணயக் குற்றிகள் பல (இடப்பட்டது / இடப்பட்டன)

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) ஐயோ வழுக்கி விட்டதே

(ii) நீங்கள் காலையுணவை உண்டீர்களா

6. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

குரங்குக்குக் கடுவன் போல மானுக்கு .............................................



[பக். 3 ஐப் பார்க்க

 சுட்டெண்: ..........................................

7. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை எழுதிப் பழமொழியைப் பூர்த்தி செய்க.

எடுக்கிறது பிச்சை ..........................................................................................

8. பின்வரும் சொற்றொடர் குறிக்கும் **தனிச்சொல்லை** எழுதுக.

வழக்கைத் தாக்கல் செய்பவன் : ..................................................

9. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் **அடைமொழியை** எழுதுக.

உயர்ந்த மரங்களின் கிளைகளில் குருவிகள் கூடு கட்டின : ..................................................

10. எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

பேரன் : ..................................................................................

11. பின்வரும் சொல் குறிக்கும் காலத்தை எழுதுக.

பாடுகிறது : ..................................................................................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) library : ....................................

(ii) canteen : ....................................

13. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)



....................................

(ii)



....................................

14. கீழே தரப்பட்ட ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) I can run fast : ..............................................................................................

(ii) May I come in? : ..............................................................................................

15. (i) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

நெகிடின்ன : ........................................................................................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் புத்தகத்தைத் தர முடியுமா?

: ........................................................................................................



[பக். 4 ஐப் பார்க்க

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

16. தரப்பட்ட எண்ணுக்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் எழுதுக.

.......................... 25099 ..........................

17. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.

பத்தொன்பதாயிரத்துப் பத்து : ..............................................................................

18.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

: ............................................................

19. 4682 இல்,

(i) இலக்கம் 4 உள்ள இடம் யாது? : .......................................

(ii) இலக்கம் 6 காட்டும் பெறுமானம் யாது? : .......................................

20. உரோமன் எண் குறிகளில் எண் 6 இனை வகைகுறித்துக் காட்ட மூன்று ஈர்க்குத் துண்டுகள் பயன்படுத்தப்பட்டன. அதுபோல் இரண்டு ஈர்க்குத் துண்டுகளினால் வகை குறித்துக் காட்டக் கூடிய 10இலும் குறைந்த உரோமன் எண்களை உரோமன் எண்குறிகளில் எழுதுக.

: ............................................................

21. தரப்பட்ட ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 70, 61, 52, 43, ......................

(ii) 1, 3, 9, 27, ......................

22.

| | |
|---|---|
| 925 | 843 |
| 468 | 654 |

கட்டத்திலுள்ள எண்களைக் கொண்டு விடை எழுதுக.

(i) 3 ஆல் வகுக்கும் போது 1 மீதியாகும் எண் எது?

: ............................................................

(ii) 4 ஆல் வகுக்கும் போது 2 மீதியாகும் எண் எது?

: ............................................................

23. அம்மா, ரூ. 17000 பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கு, கடைக்காரரிடம் முதலில் ரூ. 6500 ஐச் செலுத்தினார். அவருக்கு, மீதிப்பணத்தை மாதாந்தக் கொடுப்பனவாக 7 மாதங்களுக்குச் சமமாகப் பங்கிட்டுச் செலுத்த வேண்டியிருந்தது.

(i) அம்மா கடைக்குச் செலுத்த வேண்டியிருந்த மீதிப் பணம் எவ்வளவு?

: .......................................

(ii) ஒரு மாதத்திற்கு அம்மா கடைக்கு எவ்வளவு செலுத்த வேண்டும்?

: .......................................

24. கூட்டுக. $\frac{1}{2} + \frac{1}{12} = $ ..............

25. 

ஒவ்வொன்றும் ஒரு சதுர சென்ரிமீற்றர் பரப்பளவைக் கொண்ட 10 சதுரங்களினால் ஆன உரு இங்கு காட்டப்பட்டுள்ளது.
இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னமாகும்?

: ..............................................

26. தேங்காய் எண்ணெய் 100*ml* இன் விலை ரூ. 25 எனின், 2*l* 500*ml* தேங்காய் எண்ணெய்யின் விலை யாது?

: ..........................................................

27. 8*m* நீள நாடா ஒன்றிலிருந்து 2*m*75*cm* நீளமுள்ள பகுதியொன்று வெட்டி நீக்கப்பட்டதன் பின்னர், எஞ்சும் துண்டின் நீளம் மீற்றர், சென்ரி மீற்றரில் எவ்வளவு?

: ...................... *m* .......................... *cm*

28. பாடசாலை ஒன்றில் பரிசளிப்பு விழா 10:30 மணிக்கு ஆரம்பமாகி 13:15 மணிக்கு முடிவடைந்தது. விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?

: ..........................................................

29. பண்ணை ஒன்றிலிருந்த பிராணிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.

(i) பண்ணையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை கோழிகளின் எண்ணிக்கையிலும் 10 அதிகமானதாகும். பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.




(ii) பண்ணையில் உள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது? : ......................

(iii) பண்ணையில் உள்ள பசுக்களில் $\frac{1}{6}$ பங்கு பசுக்கள், கன்றுகள் ஈன்றுள்ளன. கன்றுகள் ஈன்ற பசுக்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................................................

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. உணவாகப் பயன்படுத்தும் வித்து வகைகள்

(1) பூசணி, வெள்ளரி (2) சோளம், கௌபி
(3) பப்பாசி, புடோல் (4) வெள்ளரி, வட்டுக்கத்தரி

31. வெடித்தற் பொறிமுறையின் மூலம் பரம்பலடையும் வித்து **அல்லாதது**,
(1) கத்தாப்பு (2) வெண்டி (3) இறப்பர் (4) காசித்தும்பை

32. இலங்கைக்கே உரிய தாவரம்
(1) சாத்தாவாரி (2) வல்லாரை (3) தொரணை (4) குப்பைமேனி

33. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் 'மலர்வு' எத்தனையாவது படிமுறையாகும்?
(1) முதலாவது (2) மூன்றாவது (3) நான்காவது (4) ஐந்தாவது

34. முட்டையிட்டு இனம் பெருக்குவது
(1) கீரி (2) எலி (3) உடும்பு (4) அணில்

35. ஆறுகால் பிராணி,
(1) தேள் (2) வெட்டுக்கிளி (3) இறால் (4) சிலந்தி

36. பன்சல, கோயில் ஆகிய சமயத்தலங்களுடன் தொடர்புடைய பண்டிகைகளை முறையே காட்டும் விடை
(1) வெசாக், நவராத்திரி (2) நத்தார், நவராத்திரி
(3) றமழான், பொசான் (4) எசல, நத்தார்

37. குப்பைகளை உக்கச் செய்து பசளையாக மாற்ற உதவும் விலங்குகள்
(1) கறையான், மண்புழு (2) கரப்பான், சிலந்தி
(3) தேனீ, வீட்டுஈ (4) சிலந்தி, தேனீ

38. மாந்தறை, யால ஆகிய பிரதேசங்களில் கடலில் கலக்கும் நதிகள் முறையே
(1) நில்வளா கங்கை, மாணிக்க கங்கை (2) களுகங்கை, களனிகங்கை
(3) ஜின் கங்கை, மகாவலி கங்கை (4) வளவை கங்கை, கலாஓயா

39. பின்வருவனவற்றில் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்
(1) வட மாகாணம் (2) வடமத்திய மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) தென் மாகாணம்

40. சிக்குன்குன்யா நோயைப் பரப்பும் பிராணி
(1) ஈ (2) மணிஇலையான் (3) நுளம்பு (4) நாய்

41. நெற்பயிர்ச் செய்கையில் **பயன்படுத்தப்படாத** உபகரணம்
(1) பரம்புப்பலகை (2) கலப்பை (3) மண்வெட்டி (4) முள்ளு

42. தாவர உணவுகளை **மாத்திரம்** உண்பது
(1) கிளி (2) காகம் (3) மயில் (4) ஓணான்

43. காந்தத் துண்டை நோக்கிக் கவரப்படும் பொருள்
(1) உருக்கு (2) அலுமினியம் (3) பித்தளை (4) மெழுகு


[பக். 7 ஐப் பார்க்க

44 பின்வருவனவற்றில் குழுவிளையாட்டு

(1) எல்லே விளையாட்டு (2) ஈட்டி எறிதல்

(3) தட்டெறிதல் (4) குண்டு போடுதல்

45. கொல்லன் கம்மாலையில் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம்,

(1) வனைசில்லு (2) செக்கு (3) நுகத்தடி (4) பட்டடை

46. பயிர்ப் பாத்தி ஒன்றை அமைக்கும் இடத்தில் இருக்க வேண்டிய பண்பு **அல்லாதது,**

(1) மணலும் களியும் சமஅளவில் இருத்தல்.

(2) நன்றாக சூரிய ஒளி கிடைத்தல்.

(3) உக்கிய தாவர விலங்குக் கழிவுகள் காணப்படல்.

(4) நன்றாக நீர் தேங்கி நிற்றல்.

47. நீண்ட காலம் வைத்திருப்பதற்காக அதி குளிரேற்றியில் வைத்துப் பேணப்படும் உணவு எது?

(1) மரக்கறி (2) மீன் (3) எலுமிச்சை (4) கருவாடு

48. பலாக்காயில் அதிகம் அடங்கியுள்ள போசணைப் பொருள்,

(1) புரதம் (2) விற்றமின் (3) காபோவைதரேற்று (4) கனியுப்புகள்

49. பஸ்ஸுக்காக வரிசையில் நிற்கும் போது பின்னால் இருக்கும் ஒரு மாணவன் வரிசையின் முன்னால் போய் நுழைய முயலும் சந்தர்ப்பமொன்றில் நாம் நடந்து கொள்ளத்தக்க **உறுதிப்பாடான** நடத்தை எது?

(1) வரிசையில் நுழைய முற்பட்ட மாணவரை ஏசித்தீர்த்தல்.

(2) பயந்த சுபாவத்துடனும் தாழ்வுடனும் அதற்கு இடமளித்தல்.

(3) மாணவரின் பிழையான நடத்தையைச் சுட்டிக் காட்டி, தங்களுக்கு உரிய இடத்தில் போய் நிற்பதே நம் எல்லோருக்கும் நல்லது எனக் கூறுதல்.

(4) புன்முறுவலுடன் அந்த மாணவனின் நடத்தையைப் பொறுத்துக் கொள்ளுதல்.

50. எல்லே விளையாட்டில் ஓர் அணியில் இடம் பெறும் வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை,

(1) 10 (2) 12 (3) 14 (4) 16

51. இலங்கையின் தேசிய இலச்சினையில், பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் குறிப்பது,

(1) நிலைத்திருத்தலை (2) நாட்டையும் கட்டுப்பாடான நாட்டுமக்களையும்

(3) தன்னிறைவை (4) தார்மீகத்தை

52. வானவில்லில் உள்ள நிறங்களை அவதானிப்பதற்காகத் தரம் நான்கு மாணவர் மேற்கொண்ட செயற்பாட்டுடன் தொடர்புடைய படம் அருகே தரப்பட்டுள்ளது. இதில் சூரிய ஒளி படும் வகையில் நீருள்ள பேசினில் வைக்கப்பட்டுள்ள பொருள் A யாது?




(1) காட்போட் அட்டை (2) பிளாஸ்ரிக் கீலம்

(3) பலகைத் துண்டு (4) முகம்பார்க்கும் கண்ணாடி

53. படகமுவ வனம் அமைந்துள்ள மாவட்டம்,

(1) குருநாகல் (2) பொலன்னறுவை (3) கண்டி (4) அநுராதபுரம்

54. தொல்பொருள் பெறுமானமும் கலைத்துவப் பெறுமானமும் மிக்க சீகிரியா அமைந்துள்ள மாகாணம்,

(1) வடமத்திய மாகாணம். (2) மத்திய மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) வடமேல் மாகாணம்

55. மின் விநியோகிக்கும் இடம் என்பதைக்காட்டும் குறியீடு,


(1)


(2)


(3)



(4)

56. சரியான மெய்ந்நிலையில் நடக்கும் ஒருவரின் பாதங்களின் சுவடுகளைக் காட்டும் படம் எது?


(1)


(2)


(3)


(4)

57. இலங்கையை ஆக்கிரமித்த முதல் ஐரோப்பியர்,

(1) போர்த்துக்கீசர் (2) ஆங்கிலேயர் (3) ஒல்லாந்தர் (4) ஜேர்மனியர்

58. பின்வரும் எந்த இரண்டு மாகாணங்கள் அருகருகே காணப்படுகின்றன?

(1) தென்மாகாணம், வடமாகாணம் (2) வடமாகாணம், மத்தியமாகாணம்
(3) வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் (4) ஊவா மாகாணம், மத்திய மாகாணம்.

59. பொது வாகனமான பேருந்து ஒன்றில் பயணம் செய்பவர்கள் பின்பற்றத்தக்க செயற்பாடு **அல்லாதது**,

(1) நோயாளிகள், கர்ப்பிணிகள் போன்றோர் தொடர்பாகப் பொறுப்புடன் செயற்படுதல்.
(2) பேருந்திலிருந்து இறங்கும் போது நடத்துநரிடம் பயணக்கட்டணத்தைச் செலுத்தி டிக்கட்டைப் பெறுதல்.
(3) பேருந்திலிருந்து இறங்குவதற்கு, பேருந்தின் முன்பக்க வாயிலைப் பயன்படுத்தல்.
(4) இறங்க வேண்டிய இடம் அண்மித்ததும் பேருந்தை நிறுத்துவதற்கான மணியை அடித்தல்.

60. பொழுதைப் பயனுள்ள வழிகளில் கழிக்கவும், மகிழ்ச்சியைப் பெறவும் விளையாட்டு உதவுகிறது. "விளையாட்டு பயனுள்ள ஒரு பொழுதுபோக்கு" என்ற தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- ..............................................................................................................
..............................................................................................................
- ..............................................................................................................
..............................................................................................................
- ..............................................................................................................
..............................................................................................................

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST

# முன்னோடி வினாத்தாள் 6

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

## வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ..................................................

---

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

---

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1.



(1) (2) (3)

2.



(1) (2) (3)

- 3, 4 ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

5. பின்வரும் எந்தப் பொருள் மேலிருந்து பார்க்கப்படும் போது  எனத் தோன்றும்?



(1) (2) (3)

6. பின்வரும் எந்தப் பொருள் மேலிருந்து பார்க்கப்படும் போது  எனத் தோன்றும்?



(1) (2) (3)



[பக். 3 ஐப் பார்க்க

7. பின்வரும் சம்பாசணையின் படிமுறைகள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A) நான்தான் வரைந்தேன்.
B) ஆஹா! நல்ல ஓவியம்.
C) எதைப் பார்த்து வரைந்தாய்?
D) யார் இதை வரைந்தது?
E) அழகிய அந்தக் காட்சியைப் பார்த்து.

(1) DEBAC (2) CBAED (3) BDACE

8. தனது, வலது செவியை இடது கையால் தொட்டபடி முகம்பார்க்கும் கண்ணாடியைப் பார்க்கின்ற மீனாவுக்கு இவை கண்ணாடியில் தோற்றும் விதம் எது?

(1) இடது செவியை இடதுகை தொட்டபடி தோற்றுதல்.
(2) வலது செவியை இடதுகை தொட்டபடி தோற்றுதல்.
(3) இடது செவியை வலதுகை தொட்டபடி தோற்றுதல்

9. தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான பகுதியைத் தெரிவு செய்க.




(1)


(2)


(3)

- 10, 11 ஆகிய வினாக்களில் வெறுமையாய் உள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

10. 



(1)


(2)


(3)

11. 



(1)


(2)


(3)

● பின்வரும் விவரத்தை வாசித்து 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

காலை ஐந்து மணிக்குப் பாடசாலை விடுதியில் இருந்து புறப்பட்ட நான் பேருந்து ஒன்றில் ஏறி, மாலை நான்கு மணி அளவில் எங்கள் கிராமத்தை வந்தடைந்தேன். அங்கிருந்து எங்கள் வீடு செல்லும் வழியில், கடந்த வருடம் என்னுடன் ஐந்தாம் தரத்தில் கற்ற எனது பழைய பாடசாலை நண்பர்கள் பலரையும் சந்தித்தேன். நான் கற்கும் எனது நகரப் பாடசாலை பற்றி அவர்கள் என்னிடம் விசாரித்தனர். அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்த என்னை, என் வருகைக்காகக் காத்திருந்த அம்மாவும், அப்பாவும் அன்புடன் வரவேற்றனர்.

12. இந்த விவரத்தில் குறிக்கப்படும் பிள்ளை பற்றிய மிகச் சரியான கூற்று எது?

(1) அவர் தரம் ஐந்தில் இருந்து நகர்ப்புறப் பாடசாலையில் கல்வி கற்று வருபவர் ஆவார்.

(2) அவர் நகர்ப்புறப் பாடசாலையில் இருந்து விலகி, கிராமப் பாடசாலைக்குக் கற்க வந்தவர் ஆவார்.

(3) அவர் கிராமப் பாடசாலையில் ஐந்தாம் தரம் வரைக் கற்று, பின்னர் நகர்ப்புறப் பாடசாலைக்குச் சென்றவர் ஆவார்.

13. இப்பிள்ளை கிராமத்திலுள்ள தனது வீட்டுக்கு வருவது பற்றி அவரது பெற்றோர் ஏற்கனவே அறிந்திருந்தனர் என்ற கூற்று.

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாதது

14. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடங்கள் A, B ஆகியவற்றில் இருக்க வேண்டிய எண்கள் முறையே எவை?




(1) 18, 15 (2) 20, 18 (3) 23, 15

15. 

இவ்வுருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9

16.

| | | |
|---|---|---|
| R S T U | R T S U | U T S R |
| A B C D | A C B D | D C B A |
| L M N K | L N M K | |

வெற்றுப் பகுதிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(1) K L M N

(2) K N M L

(3) N M K L

- 17, 18 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித்துண்டை வெட்டவேண்டிய விதத்தைத் தெரிவு செய்க.

17. 


(1)


(2)


(3)

18. 


(1)


(2)


(3)

19.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 7 | A | 14 | 19 | B |

என்பது ஓர் ஒழுங்கான எண்கோலமாக அமைய வெற்றிடங்கள் A, B ஆகியவற்றில் இடப்படவேண்டிய எண்கள் முறையே எவை?

(1) 9, 24 (2) 10, 25 (3) 12, 25

- 20, 21 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.

20. 



(1)


(2)



(3)

21. 


(1)


(2)


(3)

- 22, 23 ஆகிய வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

22. அவசரம் ⟶ சவரம் எனின், அவதாரம் ⟶ ............................... ஆகும்.

(1) வரம் (2) தாரம் (3) தாவரம்

23. நதிக்கரை ⟶ கதிரை எனின், இரக்கம் ⟶ ............................... ஆகும்.

(1) இகம் (2) கரம் (3) கரகம்

24. மாத்தறை என்பது - ○ □ △ ✕ எனவும்,
மடவளை என்பது - ⊠ ⊙ ⚠ ✱ எனவும் எழுதப்பட்டன எனின்,
வத்தளை என்பது எழுதப்படும் முறை எது?

(1) ⚠ △ □ ✕ (2) ⚠ □ △ ✕ (3) ⚠ □ △ ✱

- கீழே தரப்பட்ட தொடர்புகளை விளங்கி 25, 26 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

○ + 4 = 12
○ + □ = 17
□ − 3 = ⊞

25. ⊞ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 5 (2) 6 (3) 7

26. ○ + □ + ⊞ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 23 (2) 24 (3) 26

27. புடோல், திராட்சை, மிளகாய், பாகல், கொடித்தோடை, பீர்க்கு என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

(1) திராட்சை (2) புடோல் (3) மிளகாய்

28. அருகே உள்ள உருவில் a, b, c ஆகியவற்றால் குறிக்கப்படுவன வற்றை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.




(1) பறவைகள், புறா, கிளி
(2) மனிதர்கள், ஆண்கள், பெண்கள்
(3) விலங்குகள், ஊனுண்ணும் விலங்குகள், சிங்கம்

29. பண்ணையொன்றில் சில ஆடுகளும் சில புறாக்களும் இருந்தன. ஆடுகளினதும் புறாக்களினதும் கண்களின் எண்ணிக்கை 26 உம் கால்களின் எண்ணிக்கை 42 உம் ஆகும். பண்ணையில் இருந்த புறாக்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 8

30. 

தரப்பட்டுள்ள சதுரமுகியினது எல்லா விளிம்புகளிதும் நீளம் 24 சென்ரி மீற்றர்கள் எனின், அந்த சதுர முகியின் ஒரு முகத்தினது பரப்பளவு எத்தனை சதுர சென்ரி மீற்றர்களாகும்?

(1) 1 (2) 4 (3) 16


[பக். 7 ஐப் பார்க்க

31. கோபியிடம் ரூ. 80 பணம் இருப்பது, ஒரு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நாணயக் குற்றிகளிலாகும். அந்த ஒவ்வொரு வகையிலும் உள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கைகள் ஒன்றிற்கொன்று சமனாகும் எனின், கோபியிடம் உள்ள நாணயக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(1) 9 (2) 12 (3) 15

- 32, 33 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள எண்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடமாயுள்ள இடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

32.

| | | | |
|---|---|---|---|
| 1000 | 200 | 40 | ......... |

(1) 8 (2) 10 (3) 15

33. 5·2 , 4·8 , 4·4 , 4 , .........

(1) 3 (2) 3·3 (3) 3·6

34. வேலை ஒன்றில் ஈடுபட்டிருந்த ஆட்களுக்கு வழங்குவதற்காக 8 குளிர்பானப் போத்தல்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் வீதம் உள்ள 6 போத்தல்களும் 3 லீற்றர் வீதம் உள்ள 2 போத்தல்களும் இருந்தன. இவற்றை ஒருவருக்கு 500 மில்லி லீற்றர் வீதம் எத்தனை பேருக்குப் பங்கிட்டுக் கொடுக்கலாம்?

(1) 42 (2) 48 (3) 52

35. ஏப்ரல் - 28 ஆந் திகதி ஞாயிற்றுக் கிழமையாகும். ஏப்ரல் - 20 ஆந் திகதியும் மே - 6 ஆந் திகதியும் முறையே,

(1) ஞாயிற்றுக் கிழமையும், திங்கட்கிழமையும் ஆகும்.

(2) சனிக்கிழமையும், திங்கட் கிழமையும் ஆகும்.

(3) சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் ஆகும்.

36. ◆ மீனா, யமுனாவிற்கு முன்னர் எழுந்து யமுனாவிற்குப் பின்னரே உறங்கச் செல்வாள்.

◆ இராணி யமுனாவிற்குப் பின்னர் எழுந்து யமுனாவிற்கு முன்னரே உறங்கச் செல்வாள்.

இதன்படி, பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?

(1) மீனா மூவரிலும் முதலில் எழுந்து இறுதியாக உறங்கச் செல்வாள்.

(2) இராணி, மூவரிலும் இறுதியாக எழுந்து முதலில் உறங்கச் செல்வாள்.

(3) யமுனா எழும்புவது மீனாவுக்கு முன்னராயினும் இராணிக்குப் பின்னராகும்.



[பக். 8 ஐப் பார்க்க

37. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டி இவ்வாறு கூறினான்.

'எனக்குச் சகோதரனோ சகோதரியோ இல்லை. இருந்தபோதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையின் மகன் ஆவார்.'

இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது தந்தையின் படத்தை

(2) தனது படத்தை

(3) தனது மகனின் படத்தை

38. உண்டியல் ஒன்றில் இருந்த ஒரு தொகைப் பணத்தை பாபு, சோமு ஆகிய இருவர் தமக்கிடையே சமமாகப் புங்கிட்டுக் கொண்டனர். சோமு தனக்குக் கிடைத்த பணத்தை ஆறு நண்பர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தான். ஒரு நண்பனுக்கு ரூ. 8 கிடைத்தது எனின், ஆரம்பத்தில் உண்டியலில் இருந்த பணம் எவ்வளவு?

(1) ரூ. 48 (2) ரூ. 86 (3) ரூ. 96

39. இலக்கம் 3 இரண்டு தடவையும், இலக்கம் 2 நான்கு தடவையும் இலக்கம் 7 இரண்டு தடவையும் எழுத்து M மூன்று தடவையும் இடம்பெறும் நிரையைத் தெரிவு செய்க.

(1) 7 M 2 2 M 3 3 2 M 3 7

(2) 3 3 7 7 M 3 2 2 M M 2

(3) M 7 2 2 M 3 2 3 2 M 7

40.




தரப்பட்ட பெட்டியின் முகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இலக்கத்தின் இருமடங்கு இலக்கம் அதன் எதிர் முகத்தில் காணப்படுகின்றது. பெட்டியின் எல்லா முகங்களிலும் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 32 (2) 33 (3) 34

* * *

ஸிஹலு ஹிமிகம் ஆவிரிணி]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 6

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ..................................................

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| | |
| இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| | |
| பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |
| | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

மிக அதிகமான பரப்பளவில் மணல் மற்றும் மணற்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப் பகுதிகளில் மணல், புழுதிப் புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற்குன்றுகள் உருவாகின்றன. அதிக வறட்சியைத் தாங்கி வளரும் கள்ளி, பனை போன்ற சில தாவரங்கள் மட்டுமே இங்கு வளர்கின்றன. கங்காரு, ஆமை, சிலவகைப் பாம்புகள், பல்லிகள், ஒட்டகங்கள் போன்றவை பாலைவனச் சூழலைச் சமாளித்து உயிர் வாழும் உயிரினங்களாகும்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) பாலை வனத்தின் பரப்பளவில் மிக அதிகம் காணப்படுபவை எவை?

: ..........................................................................

(ii) மணல், புழுதிப் புயல்களால் பாலைவனத்தில் உருவாகின்றவை எவை?

: ..........................................................................

(iii) பாலைவனத்தில் காணப்படும் தாவரங்கள் எதைத் தாங்கி வளரும் இயல்பினைக் கொண்டவை?

: ..........................................................................

(iv) பாலைவனத்தில் வாழக்கூடிய ஊர்வன **அல்லாத** இரண்டு பிராணிகளை எழுதுக.

: ..........................................................................

(v) மணற்குன்றுகள் என்பதைப் பிரித்து எழுதுக.

: ..........................................................................

(vi) 'இலகுவான' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: ..........................................................................

2. கீழே தரப்பட்டுள்ள தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

(i) கீரியும் பாம்பும் போல : ..................................................

(ii) கல்லின் மேல் எழுதிய எழுத்துப் போல் : ..................................................

(iii) அத்தி பூத்தாற் போல : ..................................................

3. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ................................ (முயற்சி / முயர்ச்சி) உடையார் வாழ்வில் முன்னேற்றம் காண்பர்.

(ii) மூச்செடுக்க முடியாது அவதிப்பட்டவனுக்குத் .............................. (தலகணி / தலையணை) போட்டுப் படுக்க வைத்தனர்.

4. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

தமது / அண்டியே / குடியிருப்புக்களை / முற்காலத்தில் / மக்கள் / அமைத்தனர் / குளங்களை

: ..........................................................................

..........................................................................

5. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) முதியவர் கதையைக் கூறத் .............................. (தொடங்கியது / தொடங்கினார்.)

(ii) போட்டியில் கண்ணகி வித்தியாலய அணி வெற்றி ....................... (பெற்றது / பெற்றனர்).

6. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) நான் நாளக்கி வாறன். : ..........................................................................................

(ii) வானம் இருண்டு மழ பேஞ்சது. : ....................................................................

7. பின்வரும் குறளைப் பூரணப்படுத்துக.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

..........................................................................................

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

ஆவுக்கு நிரை போல, ஆட்டுக்கு ........................................................................

9. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

மரங்கள் அசைந்தன. இங்கு மரங்கள் என்பது ..........................................
(படர்க்கைப் பன்மை / தன்மைப் பன்மை)ச் சொல்லாகும்.

10. தொடக்கத்தில் உள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

புராதனம் :- புதுமை, புண்ணியம், தொன்மை, நவீனம்

11. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.

குளங்கள் வற்றி ............................................ காணப்பட்டன.

12. தமிழ்ச் சொற்களுக்குச் சமனான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) கிளி : ......................................  (ii) காது : ......................................

13. கருத்தினைத் தமிழில் எழுதுக.

(i) Please sit : ..........................................................................................

(ii) Where is my pen? : ..........................................................................................

(iii) Please come here : ..........................................................................................

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

our / is / class / This : ..........................................................................................

15. (i) 'அங்கஹுருவாதா' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: ..........................................................................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
உங்களுக்குப் பசிக்கிறதா? : ..........................................................................................

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

16. 5037 இலிருந்து 13ஐக் கழித்து வரும் விடையுடன் 28 ஐக் கூட்டுக. விடை யாது?

: ..........................................................

17. தரப்பட்டுள்ள எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.

5674, 6574, 6745, 6547 : ..........................................................

18. 5*m* 50*cm* ஐ சென்ரிமீற்றரில் எழுதுக. : ..........................................................

19. 


படத்தில் A, B, C என்னும் மூன்று பாத்திரங்களும் அவற்றின் கொள்ளளவுகளும் காட்டப்பட்டுள்ளன.
பாத்திரம் A ஐ முற்றாக நீரினால் நிரப்ப, பாத்திரம் C இனால் 6 தடவைகள் நீரூற்றப்பட்டது. அதன் பின், பாத்திரம் B பயன்படுத்தப்பட்டது. பாத்திரம் B பயன்படுத்தப்பட்ட தடவைகள் எத்தனை?

: ..........................................................

20. புத்தகம் ஒன்றின் முதல் 15 தாள்களுக்கு, பக்க இலக்கமாக உரோமன் எண் குறிகள் இடப்பட்டிருந்தன. அப்புத்தகத்தின் பத்தாவது தாளின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இடப்பட்டிருக்கும் உரோமன் எண் குறிகள் இரண்டையும் எழுதுக.

: ..........................................................

21. மு.ப 10.30 இற்கு ஆரம்பமான சிரமதானப் பணிகள் 4 மணித்தியாலம் 15 நிமிடங்களில் முடிவடைந்தன. சிரமதானப் பணிகள் முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

: ..........................................................

22. 


A, B, C, D, E, F, G, H என்னும் எட்டு இடங்களை இணைக்க உருவாக்கப்பட்டுள்ள பாடசாலைப் பூம்பாத்தி ஒன்றின் படம் அருகே தரப்பட்டுள்ளது.
மாணவன் ஒருவன் பாத்தியின் ஓரம் வழியே இடம் A இல் தொடங்கி B, C, D, E, F ஆகிய இடங்களினூடாக நடந்து சென்று இடம் G ஐ அடைந்தான். அவன் சென்ற மொத்தத் தூரம் யாது?

: ..........................................................

23. ஓர் உணவகத்திற்கு, ஒவ்வொன்றும் 25kg நிறையுடைய இரண்டு வகையான அரிசிப் பைகள் கொண்டு வரப்பட்டன. அந்த இரண்டு வகை அரிசியிலுமிருந்து பயன்படுத்தப்பட்டது போக, மீதியாகவுள்ள அரிசியின் நிறையை கீழே உள்ள உருக்கள் காட்டுகின்றன.




(i) இரண்டு வகை அரிசியிலுமிருந்து பயன்படுத்தப்பட்ட அரிசியின் மொத்த நிறை யாது?

: ..........................................................

(ii) வகை 1 இல் மீதியாகவுள்ள அரிசியை ஒரு நாளைக்கு 5kg 250g வீதம் எத்தனை நாட்களுக்குப் பயன்படுத்தலாம்?

: ..........................................................

24. தரப்பட்டுள்ள எண்கோலத்தில் அடுத்துவர வேண்டிய இரு எண்களையும் எழுதுக.

0·1, 0·5, 0·9, 1·3, 1·7, .........., ............

25. கூட்டுக. $\frac{3}{8} + \frac{1}{4} =$ ....................

26. 958 இனிப்புக்களை ஒரு பிள்ளைக்கு 5 வீதம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(i) இனிப்புக்களை எத்தனை பிள்ளைகளுக்கு வழங்கலாம்?

: ....................................................

(ii) அவ்வாறு வழங்கிய பின் மீதியாக இருக்கும் இனிப்புக்கள் எத்தனை?

: ....................................................

27. ஒரு நோயாளிக்கு தடவைக்கு 3 வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் மருந்து வில்லைகள் எடுக்க வேண்டியிருந்தது. அவருக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான மருந்து வில்லைகள் எத்தனை?

: ....................................................

28. கோபி, புத்தகக் கடையொன்றில் வாங்கிய 3 அப்பியாசப் புத்தகங்களுக்கும் 2 பேனைகளுக்கும் ரூ. 156 ஐ செலுத்த வேண்டியிருந்தது. அதற்காக ரூ.200 ஐக் கொடுத்த கோபிக்கு மீதிப் பணமாக ஒரே வகையான இரண்டு காசுத்தாள்களும் ஒரேவகையான 4 நாணயங்களும் கிடைத்தன.

(i) கோபி வாங்கிய அப்பியாசப் புத்தகம் ஒன்றின் விலை ரூ. 42 எனின், அவன் வாங்கிய பேனை ஒன்றின் விலை யாது?

: ....................................................

(ii) கோபிக்கு மீதிப்பணமாகக் கிடைத்த,

(அ) இரண்டு காசுத்தாள்களினதும் மொத்தப் பெறுமதி எவ்வளவு?

: ....................................................

(ஆ) நான்கு நாணயங்களினதும் மொத்தப் பெறுமதி எவ்வளவு?

: ....................................................

29. கொழும்பிலிருந்து முறையே வரக்காப்பொல, கேகாலை வழியாக, கண்டிக்கு உள்ள தூரம் இந்த அட்டவணையில் கிலோ மீற்றரில் காட்டப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வரக்காப்பொல, கேகாலை ஊடாக கண்டிக்கு உள்ள தூரம் எத்தனை கிலோமீற்றராகும்?

| | | | கண்டி |
|---|---|---|---|
| கேகாலை | | | 39 |
| வரக்காப்பொல | | 21 | 60 |
| கொழும்பு | 56 | 77 | ? |

: ...................................

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. பின்வருவனவற்றில் எட்டுக் கால்களை உடையது,

(1) எறும்பு (2) தேனீ (3) சிலந்தி (4) வண்ணத்துப்பூச்சி



[பக். 6 ஐப் பார்க்க

31. இலங்கைக்கே உரித்தான பறவைகள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) காட்டுக்கோழி, நெருப்புக் கோழி, ஆந்தை
(2) மயில், கழுகு, நரைப்புழுணி
(3) காட்டுச் செண்பகம், காட்டுக்கோழி, நெருப்புக்கோழி
(4) நரைப்புழுணி, ஆந்தை, சாம்பல் புறா

32. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை எது?
(1) எண்ணெய், இலவம்பஞ்சு, எருக்கலை (2) துத்திரி, ஆடையொட்டி, மகோகனி
(3) நாயுருவி, கடல்மாங்காய், எருக்கலை (4) வேங்கை, நீரல்லி, தேங்காய்

33. ஒரு குறித்த காலத்தில் **அன்றி** வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரங்கள்
(1) றம்புட்டான், இறப்பர் (2) முள்முருக்கு, மரமுந்திரி
(3) வாழை, தென்னை (4) இறப்பர், கொன்றை

34. பின்வரும் தாவர இலைகளில் அளவில் பெரியது,
(1) முருங்கை (2) வல்லாரை (3) பசளிக்கீரை (4) பொன்னாங்கண்ணி

35. இலங்கைத் தேசிய இலச்சினையில் உள்ள குறியீடுகளையும் அவற்றால் குறிக்கப்படுவன வற்றையும் சரியாகக் காட்டும் விடை
(1) தர்மச்சக்கரம் - நிலைத்திருத்தல் (2) நெற்கதிர் - தார்மீகம்
(3) நிறைகுடம் - சௌபாக்கியம் (4) சூரியன், சந்திரன் - தன்னிறைவு

36. உடலுக்குச் சக்தியைத் தரும் போசணை மிகுந்த உணவு,
(1) கருவாடு (2) கடலை (3) பசளிக்கீரை (4) ஈரப்பலா

37. வாயால் ஊதுவதன் மூலம் செயற்படுத்தப்படும் சங்கீத உபகரணம்,
(1) தபேலா (2) கைத்தாளம் (3) உடுக்கு (4) கொம்பு

38. அன்னாசிப் பிஞ்சினை உண்பதால் ஏற்படக்கூடிய தீங்கு
(1) வயிற்று வலி ஏற்படல் (2) வாந்தி எடுத்தல்
(3) கண்கள் சிவத்தல் (4) உடலில் சொறிவு ஏற்படல்

39. இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு நகரம்
(1) மொனறாகலை (2) கேகாலை (3) பதுளை (4) காலி

40. ஆணியைக் கழற்றுவதற்கு சுத்தியலைச் சரியாகப் பிடிக்க வேண்டிய முறை

(1) 
(2) 
(3) 
(4) 

41. மஞ்சட்காமாலை நோய் ஏற்படுவது
(1) நுளம்பு குத்துவதால் (2) அசுத்த நீரைப் பருகுவதால்
(3) நரி கடிப்பதால் (4) எலியின் உடலில் வாழும் தெள்ளினால்

42. 
இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?
(1) முன்னால் வளைவான பாதை (2) மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு
(3) பாதை ஒடுங்கிச் செல்கிறது (4) மின் விநியோகிக்கும் இடம்

43. மின்குமிழ் ஒளிரத்தக்க விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சுற்று எது?



(1) (2) (3) (4)

44 நதிகளையும் அவை கடலில் கலக்கும் இடங்களையும் சரியாகக் காட்டும் விடை **அல்லாதது**
(1) மகாவலி - திருகோணமலை (2) வளவகங்கை - அம்பலாங்கொடை
(3) நில்வளாகங்கை - மாத்தறை (4) களுகங்கை - களுத்துறை

45. 
நீரைக் கொண்டுள்ள பாத்திரங்களைக் காட்டும் இந்தப்படம் நீரின் எவ்வியல்பைக் காட்டுகிறது?
(1) நீருக்கு மணம் இல்லை.
(2) நீர் வடிந்தோடக் கூடியது.
(3) நீருக்குக் குறித்த வடிவம் இல்லை.
(4) நீரைக் கொதிக்க வைத்தால் ஆவியாகும்.

46. உடலில் கொதிநீர் கொட்டிய அல்லது தீப்பற்றிய ஒருவருக்கு முதலில் செய்ய வேண்டியது.
(1) சுத்தமான நீரினால் தாக்கத்திற்குள்ளான உடற்பகுதியைக் குளிர்மையாக்கல்.
(2) தாக்கத்திற்குள்ளான உடற்பகுதியில் எண்ணெய் வகை ஒன்றைப் பூசுதல்.
(3) தாக்கப்பட்ட உடற்பகுதியில் ஒட்டிக்கொண்டுள்ள ஆடைகளை அகற்றுதல்.
(4) வைத்தியரிடம் கொண்டு செல்லல்

47. 
இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது
(1) மரப் பலகையில் துளையிட (2) திருகாணியை இறுக்க
(3) ஏதேனும் ஒன்றை இறுக்கமாகப் பிடிக்க (4) சுரையை இறுக்க.

48. கொல்லன் கம்மாலையில் நெருப்பு எரியக் காற்றை வழங்கும் உபகரணம்.
(1) பட்டடை (2) செக்கு (3) புடக்குகை (4) துருத்தி

49. தேசியக் கொடி ஏற்றப்படும் பொழுது நாம் நிற்க வேண்டிய முறைக்குள் **அடங்காதது.**
(1) உடலை நேராக வைத்திருத்தல்
(2) தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடி நிற்றல்
(3) குதிகால்களை அருகருகே வைத்திருத்தல்
(4) கைவிரல்களை மடித்துப் பிடித்து பெருவிரல் நிலத்தை நோக்கி அமையுமாறு உடலுடன் கைகள் ஒட்டியிருக்குமாறு நிற்றல்

50. 
வாகனப் போக்குவரத்தையும், பாதசாரிகளையும் கட்டுப்படுத்தும் கடவையில் சிவப்பு நிற மனிதனைக் காட்டும் பாதசாரிகளுக்கான இந்த ஒளிச் சமிக்ஞை குறிப்பது,
(1) பாதசாரிகள் வீதியைக் கடக்குமிடம்
(2) பாதசாரிகள் வீதியைக் கடக்குமிடம் முன்னால்
(3) பாதசாரிகள் வீதியைக் கடக்க வேண்டாம்
(4) பாதசாரிகள் வீதியைக் கடக்கவும்


[பக். 8 ஐப் பார்க்க

51. பழத்தாவரங்களுக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி,
(1) மயிர்க்கொட்டி (2) கரப்பான் (3) சிலந்தி (4) வெண்மூட்டுப்பூச்சி

52. நான்கு மாணவர்கள் வகுப்பறையில் செய்த எளிய காற்றுத் திசைகாட்டிகள் நான்கின் வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில், மிகவும் சரியானது எது?



(1) (2) (3) (4)

53. தேசப்படங்களில் நதிகளும், பெருந்தெருக்களும் காட்டப்படும் நிறங்கள் முறையே,
(1) கபிலம், சிவப்பு (2) நீலம், சிவப்பு (3) நீலம், கறுப்பு (4) சிவப்பு, கறுப்பு

54. இலங்கைக்கு வடக்கே அமைந்திருக்கும் நாடு,
(1) மலேசியா (2) சோமாலியா (3) இந்தியா (4) அவுஸ்திரேலியா

55. பின்வரும் எப்பொருளை வீட்டிலுள்ளோர் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்துவர்?
(1) பற்தூரிகை (2) கைக்குட்டை (3) தேநீர்க்கோப்பை (4) தலையணை

56. வானவில்லில் காணப்படாத நிறம்,
(1) மஞ்சள் (2) செம்மஞ்சள் (3) கபிலம் (4) ஊதா

57. சுவரைக் கட்டும் போது நிலைக்குத்தியல்பைப் பேணுவதற்காகப் பயன்படும் உபகரணம்
(1) துறப்பணம் (2) கவர்ச்சுத்தியல் (3) சீவுளி (4) தூக்குக் குண்டு

58. இலங்கையின் மேற்கே காணப்படுவது
(1) இந்தியா (2) ஆபிரிக்க நாடுகள் (3) மலேசியா (4) பாகிஸ்தான்

59. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்துகையில் நாம் தவிர்க்க வேண்டியது
(1) பாதையைப் பரிசீலிக்காது திடீரெனப் பாதைக்கு ஓடிச் செல்லல்.
(2) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்தல்.
(3) வீதியில் நிற்கும் பிராணிகளுக்கு அருகே செல்கையில் எச்சரிக்கையாய் இருத்தல்.
(4) பாதையைக் கடக்க வெள்ளைக் கோடிடப்பட்ட பாதாசாரிகள் கடவையைப் பயன்படுத்தல்.

60. நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தமே சுகமான வாழ்விற்கு ஆதாரமாகும், 'சுற்றாடலின் சுத்தத்தைப் பேணுவதன் அவசியம்' என்ற தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

◆ ..............................................................................................
..............................................................................................
◆ ..............................................................................................
..............................................................................................
◆ ..............................................................................................
..............................................................................................

සියලුමහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

**முன்னோடி வினாத்தாள் 7**

**5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ✳ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ✳ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ✳ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- ✳ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

1. இறக்கையுள்ளது – செயற்கையானது


(1)


(2)


(3)

2. முட்டையிடுவது – நீந்தக் கூடியது – ஊர்ந்து செல்வது


(1)


(2)


(3)

- 3, 4 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்துவரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

3. 
.......-?-.......


(1)


(2)


(3)

4. 
.......-?-.......


(1)


(2)


(3)

5. 
இவ்வுருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 15
(2) 17
(3) 18

6. 2019 மார்ச் 10 ஆந் திகதிக்கும் 2019 ஜூலை 20 ஆந் திகதிக்கும் இடையில் உள்ள நாட்கள் எத்தனை? (குறித்த இரு நாட்களும் தவிர)

(1) 131 (2) 132 (3) 133


[பக். 3 ஐப் பார்க்க

7. கீழே தரப்பட்ட ஒவ்வொரு சோடிச் சொல்லுக்கும் இடையிலான தொடர்பை விளங்கி வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

| அட்சரம் ⟶ அரம் | கங்கணம் ⟶ கணம் | வந்தனம் ⟶ .......... |
|---|---|---|

(1) வதம் (2) வனம் (3) தனம்

8. எண்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடங்கள் a, b ஆகியவற்றில் வரவேண்டிய எண்களை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| 87 ⟶ | 15 ⟶ | 6 |
| 39 ⟶ | 12 ⟶ | 3 |
| 64 ⟶ | $a$ ...... ⟶ | $b$ ..... |

(1) 9, 0

(2) 10, 1

(3) 24, 6

9. 2015 ஜுன் தொடக்கம் 2018 பெப்ரவரி வரை உள்ள 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

(1) 17 (2) 18 (3) 19

- 10, 11 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

10. தென்னைக்கும் பனைக்கும் **ஓலை** போன்று நெல்லுக்கும் புல்லுக்கும் ........................ ஆகும்.

|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(1) | 6 | 5 |  (2) | 9 | 6 |  (3) | 8 | 7 |

● கீழே தரப்பட்ட தகவல்களை வாசித்து 10, 11 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

நகரம் A இல் இருந்து 10km தூரத்தில் நகரம் B உம், 5km தூரத்தில் நகரம் C உம் அமைந்துள்ளன.

நகரம் C இல் இருந்து 10km தூரத்தில் நகரம் D உம்,

நகரம் B இல் இருந்து 10km தூரத்தில் நகரம் E உம் அமைந்துள்ளன.

10. நகரம் A இல் இருந்து நகரம் E இற்கான தூரம் யாது?

(1) 40km (2) 35km (3) 20km

11. பின்வருவனவற்றுள் பிழையான தகவல் உள்ள கூற்றைத் தெரிவு செய்க.

(1) நகரம் B இல் இருந்து நகரம் D இற்கான தூரம் 5km
(2) நகரம் E இல் இருந்து நகரம் D இற்கான தூரம் 5km
(3) நகரம் C இல் இருந்து நகரம் E இற்கான தூரம் 5km

- கவிதையை வாசித்து 12ஆம் 13ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

சின்ன ஓடம் மெல்ல மெல்ல மிதந்து வருகுது
சின்னச் சின்ன அலைத் தொடர்கள் பரவிச் செல்லுது
சின்னச் சின்ன மீன் குஞ்சுகள் கரைக்கு வருகுது
சிறுவர் எங்கள் மனங்களிலே மகிழ்ச்சி பொங்குது.

12. ஓடம் எவ்வாறு நகர்ந்து செல்கிறது?

(1) மிக விரைவாக எழுந்து
(2) மிக மெதுவாக மிதந்து
(3) மெதுவாகவும், விரைவாகவும் அசைந்து

13. பின்வரும் கூற்றுக்களில் பாடலில் கூறப்படும் கூற்று எது?

(1) அலைகள் சின்னச் சின்னதாய் மிதந்து வருகின்றன.
(2) சிறுவர்கள் மகிழ்ச்சி பொங்க விளையாடுகின்றனர்.
(3) சின்னச் சின்ன மீன் குஞ்சுகள் கரையை நோக்கி வருகின்றன.

14. 2, 4, 6 என்ற மூன்று எண்களையும் பயன்படுத்தி 250 ஐ விடக் கூடியதும், 625 இற்குக் குறைந்ததும் ஒன்றிற்கொன்று வேறுபட்டதுமான எத்தனை எண்களை எழுதமுடியும்?

(1) 4 (2) 5 (3) 6

15. சங்கரி சுந்தரியிலும் மூத்தவளாயினும் நந்தினியிலும் இளையவள் ஆவாள். இம்மூவரையும் வயது குறைந்தவரில் இருந்து கூடிச் செல்லும் வகையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?

(1) நந்தினி, சங்கரி, சுந்தரி
(2) சுந்தரி, சங்கரி, நந்தினி
(3) சங்கரி, நந்தினி, சுந்தரி

- 16, 17 ஆகிய வினாக்களில் ஒரு குறித்த தொடர்புடன் கூடிய சொற்கள் தரப்பட்டுள்ளன. அத்தொடர்புக்கு மிகவும் கிட்டிய தொடர்பைக் காட்டும் வேறு மூன்று சொற்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

16. வாக்கியம் : பந்தி : கட்டுரை

(1) எலுமிச்சம்பழம் : தோடம் பழம் : ஜம்போலப்பழம்
(2) சென்ரிமீற்றர் : மீற்றர் : கிலோமீற்றர்
(3) கிராம சேவகர் : பிரதேச செயலாளர் : மாவட்ட செயலாளர்

17. வழக்கு : வழக்கறிஞர் : நீதிமன்றம்

(1) கல்வி : ஆசிரியர் : பாடசாலை

(2) நோய் : நோயாளி : வைத்தியசாலை

(3) பிரயாணம் : பிரயாணி : புகையிரதம்

18. 

எண்கள் எழுதப்பட்டுள்ள விதத்தை விளங்கி வெற்றுக் கட்டத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) 10

(2) 9

(3) 8

19. 

முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?

(1) 8 (2) 16 (3) 18

● கீழுள்ள உருவில் ஒரு நகரத்தில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கைகள் வகை குறிக்கப்பட்டுள்ளன. அதனை அவதானித்து 20, 21 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

20. 


இந்த நகரத்தில் உள்ள மொத்த வாகனங்களில் $\frac{1}{4}$ ஆக இருப்பது எந்த வாகனம் ஆகும்?

(1) வான் (2) பஸ் (3) கார்

21. நகரத்தில் உள்ள கார்களின் எண்ணிக்கை 200 எனின் அங்கு உள்ள எல்லா வாகனங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 1000 (2) 1500 (3) 1600

22. நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சுமன் | 2009.11.25 |
| நாதன் | 2009.12.23 |
| ரவி | 2009.12.02 |
| குமார் | 2009.11.04 |

இதன்படி, பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது** எது?

(1) சுமன், ரவியிலும் மூத்தவன்

(2) குமார், நாதனிலும் மூத்தவன்

(3) சுமன் குமாரிலும் மூத்தவன்

23. பக்கம் ஒன்று 10 மீற்றர் அளவுடைய சதுரவடிவமான பூம்பாத்தி ஒன்றைச் சுற்றிவர 2 மீற்றருக்கு ஒரு தூண்வீதம் நடப்பட்டு வேலி அமைக்கப்பட்டது. பூம்பாத்தியைச் சுற்றிவர நடப்பட்ட தூண்கள் எத்தனை?

(1) 16 (2) 20 (3) 24



[பக். 6 ஐப் பார்க்க

24. கங்காவிடம் இருந்த பணம் யமுனாவிடம் இருந்த பணத்தின் அரைவாசியாகும். யமுனாவிடம் இருந்த பணம் நதியாவிடம் இருந்த பணத்தின் அரைவாசியாகும். மூவரிடமும் இருந்த பணத்தின் மொத்தம் ரூபாய் 56 எனின், நதியாவிடம் இருந்த பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 21 (2) ரூபாய் 28 (3) ரூபா 32

25. 

அடைப்பினுள் உள்ள உருவை முகம்பார்க்கும் கண்ணாடியின் முன் வைத்துப் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

26. 

உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டில் சரியாகத் துளையிட வேண்டிய விதத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

27. ஒரு காணியில் $\frac{1}{3}$ இல் மிளகாயும் $\frac{1}{2}$ இல் கிழங்கும் பயிரிடப்பட்டுள்ளன. அவ்வாறு பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு மொத்தக் காணியின் என்ன பகுதியாகும்?

(1) $\frac{5}{6}$ (2) $\frac{4}{6}$ (3) $\frac{3}{6}$

28. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள ஒரு சதுர முகியின் பல்வேறு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.




இதன்படி இலக்கம் 1, 4, 6 ஆகிய இலக்கங்கள் எழுதப்பட்ட ஒவ்வொரு முகத்திற்குமுரிய எதிர்ப்பக்கங்களில் உள்ள இலக்கங்களை முறையே காட்டும் விடை யாது?

(1) 3 5 2 (2) 2 3 5 (3) 5 3 2

29. கீழே தரப்பட்டுள்ள பிரதேசங்களை, பருமனுக்கேற்ப ஒழுங்குபடுத்தும் போது மூன்றாம் நான்காம் இடங்களில் வரும் சொற்களைக் குறிக்கும் எழுத்துக்களை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - கண்டம் B - மாகாணம் C - கிராமம் D - உலகம்
E - மாவட்டம் F - நாடு G - அகிலம்

(1) A, D (2) B, G (3) B, F


[பக். 7 ஐப் பார்க்க

- நபரொருவர் x இலிருந்து y இற்கு நடந்து சென்றபாதை கீழே தரப்பட்டுள்ளது.




30. x இலிருந்து y இற்குச் சென்ற நபர், எத்தனை தடவை மேற்கு நோக்கிச் சென்றார்?

(1) 3 (2) 4 (3) 1

31. x இலிருந்து y இற்குச் செல்லும் போது அந்நபர் எத்தனை முறை வலது பக்கமாகத்திரும்பினார்?

(1) 4 (2) 5 (3) 3

- 32, 33 ஆகிய வினாக்களில் பிழையான கருத்து இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

32. (1) பூனை, ஆடு, மாடு என்பன வீட்டு மிருகங்களாகும்.
(2) புடோல், கத்தரி, பாகல் என்பன கொடி வகைகளாகும்.
(3) வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி என்பன தொடர்பு சாதனங்களாகும்.

33. (1) வாழை ஒரு கனி. அது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும்.
(2) வௌவால் ஒரு முலையூட்டி. அது இரவு நேரங்களில் சஞ்சரிக்கும்.
(3) கப்பல் ஒரு வாகனம. அது தரை வழிப் போக்குவரத்துச் சாதனம்.

- கீழுள்ள A, B, C, D ஆகிய கட்டங்களில் தரப்பட்டுள்ள சொற்களை அவதானித்து அதனடிப்படையில் 34, 35 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

| A | B | C | D |
|---|---|---|---|
| கிளி | சிறுத்தை | புறா | ஆட்காட்டிக்குருவி |
| பருந்து | தாறா | சிங்கம் | மீன்கொத்தி |
| மைனா | ஆமை | வௌவால் | மஞ்சட்குருவி |
| அன்னம் | சேவல் | கொக்கு | கடலாமை |
| கழுகு | மயில் | ஆந்தை | முதலை |

34. இந்தக் கட்டங்களிடையே பறவைகள் அல்லாத இரண்டு பிராணிகள் வீதம் உள்ள இரண்டு கட்டங்களும் எவை?

(1) A யும் B யும் (2) B யும் D யும் (3) A யும் C யும்

35. இந்தக் கட்டங்களிடையே குட்டியீன்று பாலூட்டும் இரண்டு பிராணிகளைக் கொண்ட கட்டம் எது?

(1) A (2) C (3) D

36. நீளம், அகலம், உயரம் ஆகியன *6cm* வீதம் உள்ள ஒரு மரச்சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 27 (2) 36 (3) 9



[பக். 8 ஐப் பார்க்க

37. கீழுள்ள அட்டைத் தாளை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்றை அமைப்பதற்கான விடையைத் தெரிவு செய்க.

| பாடசாலைக்கு | உள்ளது | எனது | அண்மையில் | நெருங்கிய | வீடு | நண்பனின் |
|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G |

(1) ADECFGB (2) ADECBGF (3) CEGFADB

38. இன்னும் எட்டு வருடங்களில் எனது வயதினதும் எனது இரு பிள்ளைகளின் வயதுகளினதும் கூட்டுத்தொகை 124 வருடங்கள் ஆக இருக்கும் எனின், இன்னும் ஐந்து வருடங்களில் எங்கள் மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எத்தனை வருடங்கள் ஆகும்?

(1) 100 (2) 104 (3) 115

39. ஆங்கில அகரவரிசை ஒழுங்கில், எழுத்து J தொடக்கம் எழுத்து T வரை எழுதும் போது, அவ்வெழுத்துக்களின் நிரையின் நடுவில் வரும் ஆங்கில எழுத்து எது?

(1) எழுத்து I (2) எழுத்து O (3) எழுத்து U

40. ஜூன் மாதத்தின் 11ஆம் திகதி புதன்கிழமையாகும். இன்னும் இருபத்தேழு நாட்களில் வருவது,

(1) ஜூலை - 8, செவ்வாய் ஆகும்.

(2) ஜூலை - 8, திங்கள் ஆகும்.

(3) ஜூலை - 7, வெள்ளி ஆகும்.

* * *

සියලුමහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 9

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ..........................................................

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- ✱ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ✱ **மூன்றாம்** பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✱ இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
- ✱ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- ✱ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ✱ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
- ✱ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பாடல்களை வாசிக்க.

சுத்தமே என்றும் சுகம் அளிக்கும் - தீய
சோம்பலை ஒட்டித்துரத்தும் அம்மா!
இத்தரை வாழ்வைப் பெருக்கும் அம்மா! - அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன் அம்மா!

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனை போற்றி நடப்பாய் அம்மா!
சுந்தரமேனியுண்டாகும் அம்மா! - இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

- பாடல்களை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

 (i) இப்பாடல்கள் எதன் நன்மையைப் பற்றி வலியுறுத்திக் கூறுகின்றன?
 : ......................................................................................................

 (ii) இங்கு இடம்பெறும் பழமொழியை எழுதுக.
 : ......................................................................................................

 (iii) 'அழகிய தேகம்' என்ற கருத்தைத் தரும் தொடரை எழுதுக.
 : ......................................................................................................

 (iv) 'துக்கம்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : ..................................

 (v) நாம் எதை ஓட்டித் துரத்த வேண்டும்? : ..........................................................

 (vi) இங்கு இடம்பெறும் தன்மை ஒருமைப் பெயர்ச்சொல்லை எழுதுக.
 : ......................................................................................................

2. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

 (i) அகலக் கால் வைத்தல் : ..........................................................................

 (ii) இலவு காத்த கிளி : ..........................................................................

3. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

 (i) குளிர் / மேனி / கடுமையாக / காற்றுப் / நடுங்கியது / வீசிய / பட்டு
 ......................................................................................................

 (ii) உள்ள / ஆவியாகி / பெய்யும் / மீண்டும் / ஆறு / நீர் / குளங்களில் / மழையாகப்
 ......................................................................................................
 ......................................................................................................

4. தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

 (i) **ஈமெயில்** மூலம் ஒளிப்படங்களையும் தகவல்களையும் அனுப்பலாம்.
 : ..........................................................

 (ii) **டிஸ்க்** மூலம் படங்களையும் பாடல்களையும் பார்த்தும் கேட்டும் மகிழலாம்.
 : ..........................................................

சுட்டெண்: ..............................................

5. சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) பிரதம நடுவரால் போட்டி முடிவுகள் ........................ (அறிவிக்கப்பட்டது / அறிவிக்கப்பட்டன)

(ii) அது கறையான்கள் அமைத்த ........................ (புற்று / புற்றுக்கள்)

6. பின்வரும் வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

(i) சூடு கண்ட பூனை .................................................. என்பது பழமொழி.

(ii) "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
.......................................... ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

7. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக. (உற்சாகம் / உற்ச்சாகம்)

8. பின்வரும் சொற்றொடர் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக.

முனிவர்கள் வாழுமிடம் : ............................................................

9. வெற்றிடத்துக்குப் பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக.

வாழைக்குக் குட்டி போல பனைக்கு ........................................................

10. "கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்" என்னும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.

: ..........................................................................................................

11. எழுத்துப்பிழையின்றி எழுதப்பட்ட ஆங்கிலச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) Aeroplane, Aearoplane, Aroplane

(ii) Spaider, Spider, Spidar

12 ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

(i)  : ........................................

(ii)  : ........................................

13. கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) lightening : ..................................................

(ii) railway station : ..................................................

14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

லேனா : ..................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

கண்களை மூடுங்கள் : ........................................................

16. வெற்றிடத்தில் வரவேண்டிய விடைகளை எழுதுக.

8642 = .................... + 600 + 40 + ......................

17.

| | |
|---|---|
| | 439 |
| 198 | |
| | 278 |
| 399 | |

(i) கட்டத்தினுள் உள்ள மிகப் பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் கூட்டிவரும் விடையை எழுதுக.

: ............................................

(ii) 597 ஐக் கூட்டுத்தொகையாகத் தரும் இரண்டு எண்களை தருக.

: ............................................

18. (i) தசம எண்ணைப் பின்னமாக எழுதுக. 0·3 : .................................

(ii) $\frac{4}{5}$ இன் சமவலுப் பின்னம் ஒன்றை எழுதுக. : .................................

19. 24 கோழிகளில் $\frac{2}{3}$ கோழிகள் நாளொன்றுக்கு ஒரு முட்டை வீதம் இட்டால் இரண்டு நாட்களில் கிடைக்கும் முட்டைகள் எத்தனை?

: ..........................................................

20. பாடசாலை ஒன்றில் 14:15 மணிக்கு ஆரம்பமான விளையாட்டு விழா 17:30 மணிக்கு முடிவடைந்தது எனின், விளையாட்டு விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது.

: ..............................................................................................

21. ஒரு பாத்திரத்தில் 12*l* 500 *ml* வர்ணப் பூச்சு உள்ளது. அதிலிருந்து 4*l* 750*ml* பூச்சு, சுவரில் பூச்சப்பட்டது. மீதியாகவுள்ள வர்ணப் பூச்சின் அளவு யாது?

: .....................*l* ......................... *ml*

22.




பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1*cm* உம் அகலம் 1*cm* உம் ஆகும். உருவில் நிழற்றப்பட்டுள்ள நான்கு வடிவங்கள் A, B, C, D எனப் பெயரிடப்பட்டுள்ளன.

(i) எழுத்து B இனால் காட்டப்படும் வடிவத்தின் சுற்றளவு யாது?

: .........................................................

(ii) பரப்பளவில் சமனான வடிவங்களுக்குரிய எழுத்துக்களை எழுதுக.

: .........................................................

23.



இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?

: ..............................................................................................

24. கீழே தரப்பட்டுள்ள நேரத்தை வேறு ஒரு முறையில் கூறக் கூடிய விதத்தை எழுத்துக்களில் எழுதுக.

இரண்டுக்குப் பதினைந்து நிமிடங்கள் : ..............................................................



[பக். 5 ஐப் பார்க்க

25. 

இரு குற்றுக்களுக்கிடையே $1cm$ தூரம் இருக்கத்தக்கதாக குற்றுக்கள் இடப்பட்டுள்ள இவ்வட்டையில் காணப்படும் வடிவத்தின் பரப்பளவு எத்தனை சதுரசென்ரிமீற்றர்?

: ..............................................

26. கம்பி ஒன்றிலிருந்து 9 இரும்பு வளையங்களைத் தயாரிக்க முடியும். 300 இரும்பு வளையங்கள் தயாரிப்பதற்கு அவ்வாறான எத்தனை கம்பிகள் தேவை?

: ..........................................................

27. 


(i) இந்த உருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

: ..............................................

(ii) உருவில் a, b, c எனப் பெயரிடப்பட்டுள்ள மூன்று பக்கங்களினதும் மொத்த நீளம் யாது? : ..............................................

28. கீழுள்ள திண்மங்களின் உச்சிகள், ஓரங்களின் எண்ணிக்கைகளை எழுதுக.

(i) 

உச்சிகள் ...............

ஓரங்கள் ...............

(ii) 

உச்சிகள் ...............

ஓரங்கள் ...............

29. குறித்த ஒரு தினத்தில் தோட்டத்திற்கு வந்த பறவைகளின் எண்ணிக்கையைக் கீழே உள்ள வரைபு காட்டுகிறது.




(i) தோட்டத்திற்கு வந்த மைனாக்களின் எண்ணிகை கிளிகளினதும், செண்பகங்களினதும் எண்ணிக்கைக்குச் சமனானதாகும். மைனாக்களின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) தோட்டத்திற்கு வந்த பறவைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

:.........................

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. பூக்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ உதவும் விலங்கின் நடத்தை,
 (1) ஆடு மாடுகள் தோட்டங்களில் மலசலம் கழித்தல்
 (2) ஆந்தை தேவாங்கு போன்றவை தாவரங்களில் இரவைக் கழித்தல்
 (3) தேனீக்கள் பூக்களில் அமுதம் பருகுதல்.
 (4) செவ்வெறும்புகள் தாவரங்களில் கூடமைத்தல்

31. 

இது எத்தாவரத்தின் இலையாகும்?
 (1) வேம்பு (2) கறிவேப்பிலை
 (3) அகத்தி (4) செவ்வந்தி

32. அருகே காட்டப்படும் பறவை



(1) நீர்க்காகம் (2) காகம்
(3) மீன்கொத்தி (4) பருந்து

33. எண்ணெய் பெறப் பயன்படும் வித்துவகை,
(1) பாலை (2) இலுப்பை (3) பாக்கு (4) முதிரை

34. நாற்று மேடைகளில் இருந்து கன்றுகள் பெறப்படாமல் நேரடியாகப் பாத்திகளில் நடப்படும் வித்துவகை,
(1) கறிமிளகாய் (2) கோவா (3) தக்காளி (4) கரட்

35. பின்வரும் பிராணிகளில் பொருளாதாரக் காரணங்களுக்காக வளர்க்கப்படுபவை எவை?
(1) நாய், அணில் (2) பூனை, மைனா (3) கிளி, நாய் (4) தேனீ, கோழி

36. 
இக்குறியீட்டினால் கருதப்படுவது.
(1) கவனமாகக் கையாளுங்கள் (2) நொருங்கக் கூடியது
(3) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது (4) பாவனைக்கு உதவாதது

37. காலிக் கோட்டை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது**
(1) வரலாற்றுப் பிரசித்தி பெற்றது.
(2) எல்லாச் சமயத்தினரும் வணங்கித் துதிக்கும் இடமாக விளங்குவது.
(3) முதன் முதலில் போர்த்துக்கேயரால் நிர்மாணிக்கப்பட்டது.
(4) ஒல்லாந்தரால் அரணாக அமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது.

38. 

உருவில் உள்ள காற்றுத் தட்டைச் செய்வதற்கு வித்து A பயன்படுத்தப் பட்டுள்ளது. எழுத்து A இனால் காட்டப்படும் வித்து வகை எது?
(1) விளா (2) பலா
(3) இறப்பர் (4) சோளம்

39. இலங்கைத் தேசப்படத்தில் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ள மாகாணங்கள் இரண்டும் எவை?



(1) வடமாகாணம், வடமத்திய மாகாணம்
(2) வடமாகாணம், தென்மாகாணம்
(3) கிழக்குமாகாணம், மத்தியமாகாணம்
(4) கிழக்கு மாகாணம், வடமாகாணம்

40. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் குறியீடு,
(1) பூவிதழ்கள் (2) அரச இலைகள் (3) தர்மச் சக்கரம் (4) நிறைகுடம்

41. இலையான் மூலம் பரவும் நோய்,
(1) கழிச்சல் (2) மலேரியா (3) டெங்கு (4) நீர்வெறுப்பு

42. திசாவாவியை அமைத்த மன்னன்
(1) பண்டுகாபயன் (2) தாதுசேனன் (3) தேவநம்பியதீசன் (4) மகாசேனன்

43. கைக்குட்டையில் பூவைத் தைக்கும்போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை
(1) வெட்டுக்குத்துத் தையல் (2) நரம்புத்தையல்
(3) கம்பளித்தையல் (4) விஸ்பம் தையல்

44. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருக்கும் இடம்
(1) திருகோணமலை (2) ஒலுவில் (3) அம்பாந்தோட்டை (4) கொழும்பு

45. தேசிய இலச்சினையில் உள்ள, 'பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம்' குறிப்பது,
(1) தார்மீகத்தை (2) நாட்டையும், கட்டுப்பாடான நாட்டுமக்களையும்
(3) நிலைத்திருத்தலை (4) தன்னிறைவை

46. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள்,
(1) பயறு, பருப்பு (2) வல்லாரை, பசளி
(3) சோறு, பலாக்காய் (4) வெண்டி, கரட்

47. நீருடன் நன்கு கலக்கக் கூடிய திரவம்,
(1) வினாகிரி (2) பெற்றோல்
(3) தேங்காயெண்ணெய் (4) மண்ணெண்ணெய்

48. பச்சை நிறத்தைப் பெறுவதற்குக் கலக்க வேண்டிய நிறங்கள்,
(1) நீலம், மஞ்சள் (2) சிவப்பு, கறுப்பு (3) நீலம், கறுப்பு (4) சிவப்பு, மஞ்சள்

49. கடதாசித் துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்,
(1) அல்பனா (2) கொலாஜ் (3) ஒரிகாமி (4) ஸ்ரென்சில்

50. மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகிறது?
(1) மண்திட்டுக்களை அமைத்தல் (2) கல்லாலான தடுப்புக்களை அமைத்தல்
(3) மூடுபயிர் வளர்த்தல் (4) மரங்களை வெட்டுதல்

51. உணவு உண்ட பின்னர் நாம் செய்ய வேண்டிய நற்பழக்கமாக **அமையாதது,**
(1) பயன்படுத்திய பாத்திரத்தைக் கழுவிச் சுத்தம் செய்தல்
(2) உணவு எஞ்சியிருப்பின் அதைப் பாத்திரத்தில் அப்படியே வைத்துவிடுதல்
(3) கையையும் வாயையும் சுத்தம் செய்து கொள்ளல்
(4) தாம் அமர்ந்திருந்த இருக்கையை ஒழுங்காக வைத்தல்.

52. இலங்கை தொடர்பான **பிழையான கூற்று,**
(1) இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
(2) இலங்கை 1948இல் ஆங்கில ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது.
(3) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.
(4) இலங்கை இந்தியாவிற்கு வடக்கில் அமைந்துள்ளது.

53. இலங்கை குடியரசானது,
(1) 1948இல் (2) 1956இல் (3) 1972இல் (4) 1978இல்


[பக். 8 ஐப் பார்க்க

54. தேசியக் கொடி ஏற்றப்படும் போது நாம் நிற்க வேண்டிய முறைகளுக்குள் **அடங்காதது**,
   (1) உடலை நேராக வைத்தபடி நிற்றல்
   (2) தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடி நிற்றல்
   (3) குதிகால்களை அருகருகே வைத்தபடி நிற்றல்
   (4) கைவிரல்களை மடித்துப் பெருவிரல் நிலத்தை நோக்கி அமையுமாறு உடலுடன் கைகள் ஒட்டியிருக்குமாறு நிற்றல்

55. இலங்கைத் தேசியக் கொடியில் உள்ள வாளேந்திய சிங்கம் எந்நிறப் பின்னணியில் காணப்படுகிறது?
   (1) செம்மஞ்சள்   (2) பச்சை   (3) சிவப்பு   (4) மஞ்சள்

56. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை,
   (1) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல்.   (2) அவித்தல்
   (3) தேனில் அமிழ்த்தி வைத்தல்   (4) சுவையூட்டிகளைச் சேர்த்தல்

57. தலைக்கவசம் அணிந்து தொழிலில் ஈடுபட வேண்டியவர்,
   (1) கல்லுடைப்பவர்   (2) தச்சு வேலை செய்பவர்
   (3) வயலில் வேலை செய்பவர்.   (4) வலை வீசுபவர்.

58. இலங்கையில், நுளம்புகள் காரணமாக, கடந்த காலத்தில் பரவிய ஒரு கொள்ளை நோயையும், தற்காலத்தில் பரவுகின்ற ஒரு கொள்ளை நோயையும் முறையே காட்டுவது,
   (1) பிளேக், நீர்வெறுப்பு   (2) டெங்கு, நீர்வெறுப்பு
   (3) மலேரியா, டெங்கு   (4) மலேரியா, பிளேக்

59. பொது வாகனங்கள் பெரும்பாலும்,
   (1) ஒரு நேரசூசிப்படி பயணம் செய்யும்.
   (2) தனியார் வாகனக் கட்டணத்திலும் கூடிய கட்டணத்தை அறவிடும்.
   (3) விஷேடமான ஆட்களுக்காக மாத்திரமே சேவையில் ஈடுபடும்.
   (4) பயணிக்கும் போது சில நிறுத்துமிடங்களில் மாத்திரமே தரித்துச் செல்லும்.

60. மேற்கில் சூரியன் மறையத் தொடங்கும் மாலை நேரத்து வானம், மனதைக் கவரும் அழகுமிக்கது. 'அழகிய மாலை வானம்' என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

◆ ......................................................................................................
......................................................................................................

◆ ......................................................................................................
......................................................................................................

◆ ......................................................................................................
......................................................................................................

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 10

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - I

**45** நிமிடம்

சுட்டெண்: ...................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவை ஒத்த உருவைத் தெரிவுசெய்க.

1.



(1) (2) (3)

2.



(1) (2) (3)

- 3, 4 ஆகிய வினாக்களில் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையினைத் தெரிவு செய்க.

3.




(1) B, F (2) C, E (3) A, D

4.




(1) A, C (2) B, D (3) E, F

5. கீழே ஒரு சம்பவத்தின் ஐந்து சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைத் தெரிவு செய்க.

A - ஆடை அணிந்தாள்.
B - முகம் கழுவினாள்.
C - காலை உணவை உண்டாள்.
D - அதிகாலையில் எழுந்தாள்.
E - பாடசாலைக்குப் புறப்பட்டாள்.

(1) DBACE (2) DABCE (3) DCBAE



[பக். 3 ஐப் பார்க்க

6. கீழுள்ள உருக்களை அவதானியுங்கள்.


A


B


C


D


E

இவ்வுருக்களைக் குறித்தவொரு இயல்பு தொடர்பாக, ஒழுங்குபடுத்தும் போது மூன்றாவதாக இடம்பெறும் உருவைக்குறிக்கும் எழுத்து எது?

(1) A (2) D (3) E

- கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்கள் இலக்கங்களின் நிரையை அவதானித்து 7, 8 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

**6 2 M 4 2 P 6 L K M 2 4 M 5 R K L P**

7. ஒரே ஒரு தடவை மாத்திரம் வந்துள்ள ஆங்கில எழுத்து எது?

(1) P (2) R (3) L

8. மூன்றாவது தடவையாக வரும் M என்னும் எழுத்துக்கு முன்னாலும் பின்னாலும் வருபவை எவை?

(1) 2உம் 4உம் (2) Kஉம் 2உம் (3) 4உம் 5உம்

9. 'பொய் பேசுபவர்கள் வாழ்க்கையில் முன்னேறமாட்டார்கள்' என்பதை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) வாழ்க்கையில் முன்னேறாதவர்கள் பொய் பேசியோராவர்.

(2) பொய் பேசுவோருக்கு வாழ்க்கையில் முன்னேற்றமில்லை.

(3) வாழ்க்கையில் முன்னேறிய எவரும் பொய் பேசியதில்லை.

10. A, B, C, D என நான்கு மாணவர்கள் உள்ளனர். இவர்களில் A யும் C யும் தமிழ்ப் பாடத்தில் திறமையானவர்கள், B யும் C யும் ஆங்கில பாடத்தில் திறமையானவர்கள். B யும் Cயும் Dயும் விஞ்ஞான பாடத்தில் திறமையானவர்கள். A யும் Dயும் கணித பாடத்தில் திறமையானவர்கள். இவர்களுள் தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் திறமையானவர் யார்?

(1) A (2) B (3) C

- 11, 12 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்சோடிகளில் ஒரு சோடி ஏனைய இரண்டு சொற்சோடிகளிலுமிருந்து வேறுபட்டது. வேறுபட்ட அச்சோடியைத் தெரிவு செய்க.

11. (1) மா - பழம் (2) சோறு - அரிசி (3) கோவா - மரக்கறி

12. (1) நத்தை - ஓடு (2) சிலந்தி - வலை (3) கறையான் - புற்று



[பக். 4 ஐப் பார்க்க

13. 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல' என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்

(1) துன்பத்திற்கு மேல் துன்பம் ஏற்படல்

(2) துன்பத்திலிருந்து மீள முயற்சித்தல்

(3) துன்பம் ஏற்படுவதை எண்ணி மனங்கலங்குதல்

● 14, 15 ஆகிய வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

14. மின்விசிறி : காற்று எனின், விளக்கு : ..................................

(1) திரி (2) வெளிச்சம் (3) எண்ணெய்

15.

| |
|---|
| அருவருப்பு |
| மான் |
| சனம் |

⇒ வருமானம் எனின்,

| |
|---|
| நீர்மட்டம் |
| குலை |
| படம் |

⇒ ............................

(1) பட்டம் (2) பப்படம் (3) மட்குடம்

16. வரிசையொன்றில் 22 மாணவர்கள் நின்றனர். அந்த வரிசையின் பின்னாலிருந்து பார்க்கும் போது மேரி 10 ஆவது இடத்தில் நின்றாள் எனின், முன்னாலிருந்து பார்க்கும் போது மேரி எத்தனையாவது இடத்தில் நிற்பாள்?

(1) 11 (2) 12 (3) 13

17. ரஞ்சனியின் வயதின் இருமடங்கு ராகினியின் வயதாகும். ராகினியின் வயதின் இருமடங்கு மாதவியின் வயதாகும். இம்மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 14 வருடங்கள் எனின், ரஞ்சனியின் வயது எத்தனை வருடங்களாகும்?

(1) 1 (2) 2 (3) 4

● 18, 19 ஆகிய வினாக்களில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

18.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| கதிரை | காது | எள் |
| மேசை | மூக்கு | பாசிப் பயறு |
| அலுமாரி | உடல் | கோதுமை |

19.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| தச்சன் | ஓவியன் | விமானி |
| மேசன் | கவிஞன் | பிரயாணி |
| மீனவன் | சிற்பி | சாரதி |

- 20, 21 ஆகிய வினாக்களில் பிழையாக வரையப்பட்டுள்ள படங்களை மாத்திரம் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

20. 

A B C D

(1) Bயும் Cயும் (2) Aயும் Bயும் (3) Bயும் Dயும்

21. 

A B C D

(1) Aயும் Cயும் (2) Aயும் Bயும் (3) Bயும் Dயும்

- 22, 23 ஆகிய வினாக்களில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

22. வினாப்பத்திரத்தில் .................................. வினாக்கள் .................................. இருந்தமையினால் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறக் கூடியதாக இருந்தது.

(1) கீறப்பட்டிருந்த - இலகுவாக
(2) கேட்கப்பட்டிருந்த - இலகுவாக
(3) திருத்தப்பட்டிருந்த - கடினமாக

23. எல்லோரும் வானொலியில் ............................ செய்திகளைக் கவனமாக, ......................... க் கொண்டிருந்தனர்.

(1) ஒலிபரப்பான - கேட்டு
(2) ஒளிபரப்பான - ரசித்து
(3) ஒலிபரப்பான - பார்த்து

24. மதியிடம் இருந்த பணத்தைவிட மதனிடம் இருந்த பணம் குறைவானதாகும். மதுவிடம் இருந்தபணம் மதியிடம் இருந்த பணத்தை விட அதிகமானதாகும். குறைந்த பணத்தை வைத்திருந்தவரில் இருந்து கூடிய பணத்தை வைத்திருந்தவர் வரை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை யாது?

(1) மது, மதி, மதன் (2) மதன், மதி, மது (3) மதன், மது, மதி

25. மந்திரப் பெட்டி ஒன்றில் இடப்படும் ஒரு பொருள் ஒவ்வொரு நிமிடத்திலும் இரட்டிப்பாகிக் கொண்டு செல்லும். குறிப்பிட்ட பொருள் ஒன்று, இடப்பட்டு 50 ஆவது நிமிடத்தில் மந்திரப் பெட்டி பூரணமாக நிரம்பியது எனின், பெட்டியின் அரைவாசி நிரம்ப எடுத்த நேரம் எவ்வளவு?

(1) 24 நிமிடம் (2) 25 நிமிடம் (3) 49 நிமிடம்


[பக். 6 ஐப் பார்க்க

26. கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



............................



(1)



(2)



(3)

- 27, 28 ஆகிய வினாக்களில் வெற்று அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

27.





(1)



(2)



(3)

28.





(1)



(2)



(3)

- பின்வரும் அடைப்பில் உள்ள எண் தொடர்புகளை விளங்கி அதற்கு ஏற்ப, 29, 30 ஆகிய வினாக்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | @ | 12 | = | 28 |
| 9 | Ω | 3 | = | 3 |
| 12 | ✳ | 4 | = | 48 |

29. 6 Ω 2 @ 9 = .............

(1) 9 (2) 12 (3) 21

30. 7 ✳ 4 @ .......... = 37

(1) 7 (2) 8 (3) 9

- கோலத்திற்கேற்ப 31, 32 ஆகிய வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

31.




(1) 23 (2) 18 (3) 11

32.




(1) 12 (2) 8 (3) 6

33. ◆ தற்போது தந்தையின் வயது மகனின் வயதின் ஏழுமடங்காகும்.
◆ இன்னும் மூன்று வருடங்களில் தந்தையின் வயது மகனின் வயதின் நான்கு மடங்காகும்.

இதன்படி, தற்போது தந்தையினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 40 வருடங்கள் (2) 32 வருடங்கள் (3) 24 வருடங்கள்

34. P, Q ஆகிய இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 16km ஆகும். நகரம் P இற்கும் நகரம் Q இற்கும் இடையேயுள்ள நகரம் R, நகரம் P இலிருந்து 4km தூரத்தில் உள்ளது எனின், R, Q ஆகிய நகரங்களுக்கிடையேயான தூரம் P, Q ஆகிய நகரங்களுக்கிடையேயான தூரத்தின் என்ன பங்காகும்?

(1) $\frac{1}{4}$ (2) $\frac{2}{4}$ (3) $\frac{3}{4}$

35. 4 தொடக்கம் 84 வரையுள்ள எண்களில் 4 இனால் மீதியின்றி வகுபடக் கூடிய எண்களை இறங்கு வரிசையில் எழுதும்போது ஏழாவதாக வரும் எண் எது?

(1) 60 (2) 32 (3) 28

36. D, பாடசாலைக்குச் சென்றது, J இற்கும் F இற்கும் முன்னர் எனினும் B இற்குப் பின்னராகும். பாடசாலைக்கு முதலில் சென்றவர் B அல்ல. அவ்வாறெனின் D, B, J, T, F ஆகிய ஐந்து பேரிலும் பாடசாலைக்கு முதலில் சென்றவர் யார்?

(1) T (2) D (3) J

37. அடைப்புக்களில் எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | 10 | 7 | 16 |
| 28 | 19 | 22 | 13 |
| 25 | 34 | 31 | 40 |
| -?- | 43 | 46 | 37 |

(1) 12 (2) 52 (3) 26

38. ஜுலை மாதத்தின் முதலாம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் வரும் வியாழக்கிழமைகளினதும் வெள்ளிக் கிழமைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 9 (3) 8

39. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16
(2) 13
(3) 9

40. கடிகாரம் ஒன்று நேரம் 9·30 ஐக் காட்டும் போது கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையில் காணப்படும் கோணம்,

(1) ஒரு செங்கோணமாக இருக்கும்.
(2) ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கும்.
(3) ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும்.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව] 
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST முன்னோடி வினாத்தாள் 10

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

# வினாத்தாள் - II

**1** மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: ..................................................

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| **02** | |
| **03** | |
| **04** | |
| **05** | |
| **06** | |
| **07** | |
| **08** | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன். | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | |

[ பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

சீகிரியா இலங்கையின் இணையற்ற கலைப்பாரம்பரியத்தின் சின்னமாகும். இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்தில் அமைந்துள்ளது. காசியப்பன் என்னும் அரசன் தனது பாதுகாப்பிற்காக மறைந்திருந்து வாழ்ந்த போது இதனை ஓர் எழில் கொஞ்சும் குன்றாக ஆக்கினான். இயற்கை வர்ணங்களைக் கொண்டு வரையப்பட்ட பல சுவரோவியங்கள் இங்கு காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் காட்சி தருகின்றன.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) சீகிரியா அமைந்துள்ள நகரம் எது?

: ..............................................................................................

(ii) சீகிரியாவின் சுவரோவியங்கள் எவற்றைக் கொண்டு வரையப்பட்டுள்ளன?

: ..............................................................................................

(iii) காசியப்பன் சீகிரியாவில் மறைந்து வாழ்ந்தது எதற்காக?

: ..............................................................................................

(iv) 'அழகு' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: ..............................................................................................

(v) 'சுவரோவியங்கள்' என்பதைப் பிரித்து எழுதுக.

: ..............................................................................................

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) மறைந்திருந்து வாழ்ந்த காசியப்பன்.

(2) இலங்கைக் கலைப் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் சீகிரியா

(3) காசியப்பனின் திறமை

2. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) கண்வளர்தல் : ..............................................................................

(ii) ஒற்றைக் காலில் நிற்றல்: ..............................................................................

3. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) கமலா காலையில் எழுந்து பல்துலக்கி நீராடி உணவுண்டு பாடசாலைக்குப் புறப்பட்டான்

(ii) அதோ அண்ணா ஓர் ஆச்சிரமம் தெரிகிறது

4. சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) தீமை செய்பவர்கள் (துன்பப்பட்டனர் / துன்பப்படுவர்)

(ii) நமது நாட்டுக்குத் தேயிலை ஏற்றுமதியின் மூலம் அதிகளவு வருமானம் (கிடைக்கிறது / கிடைக்கின்றன)



[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண்: ............................................

5. காந்தியடிகள் ஏழைகளின் வாழ்க்கையை உயர்த்தத் **திடசங்கற்பம்** கொண்டார். திடசங்கற்பம் என்னும் சொல்லின் கருத்தை எழுதுக.

: .......................................................................................................................

6. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) எசமான், தன்மீது ......................... (பாரபட்சமாக / பாரபட்ச்சமாக) நடந்து கொள்கிறார் எனப் பிரபு எண்ணினான்.

(ii) ......................... (செய்நன்றி / செய்ந்நன்றி) மறவாது வாழ்வதே சிறந்த பண்பாகும்.

7. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

தொட்டிற் பழக்கம் ...........................................................................................

8. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

வைத்து / தடுப்போம் / சூழலைச் / நுளம்புகள் / சுத்தமாக / பெருகுவதைத்

.......................................................................................................................

.......................................................................................................................

9. கீழே தரப்பட்ட சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட நிலம் : ..............................................................

10. பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.

பொருள் ...........................................................

11. வெற்றிடத்துக்குப் பொருத்தமான மரபுப் பெயரை எழுதுக.

மாட்டுக்குப் பசு போல கோழிக்கு ........................................................

12. கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) river : ......................................  (ii) light blue : ......................................

13 ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

(i) 

: ..............................

(ii) 

: ..............................

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) big / I / eyes / have : ..........................................................................

(ii) are / you / what / doing? : ..........................................................................

15. (i) 'சந்துதா' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: ..........................................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் பாடசாலையின் பெயர் என்ன?

: ..........................................................................

16. 'தொண்ணூற்று மூவாயிரத்து நானூற்று ஒன்று' என்னும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: ..........................................................................

17. 


அடைப்பினுள் உள்ள மிகச்சிறிய ஒற்றை எண்ணை மிகப்பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

: ..........................................................................

18. பின்வரும் உரோமன் எண்களுக்கு முன்னால் வரும் உரோமன் எண்களை எழுதுக.

(i) .................. XVIII (ii) .................. XV

19. 53468 என்ற எண்ணில் உள்ள இலக்கம் 5 இன் பெறுமானம் யாது?

: ..........................................................

20. 

(i) இந்தத் திண்மத்தின் பெயர் யாது?

: ..................................

(ii) இத்திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உள்ளன?

: ..................................

21. இப்போது நேரம் பி.ப 3.30 ஆகும். இன்னும் மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் என்ன நேரம் என்பதை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

: ..........................................................

22. 4 மீற்றர் நீளமான இரும்புக்கம்பி ஒன்றிலிருந்து 2 மீற்றர் 42 சென்ரிமீற்றர் அளவுடைய ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள கம்பியின் நீளம் மீற்றர் சென்ரி மீற்றரில் எவ்வளவு?

: ..........................................................

23. ஒரு தொழிற்சாலையில் எட்டுமணித்தியாலத்தில் 8000 பீங்கான்கள் உற்பத்தி செய்யப்படும். இத்தொழிற்சாலையில் 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பீங்கான்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................................

24. 93431, 24972, 94351, 36797 ஆகிய எண்களை இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக

: ..........................................................................................................................

25. மோகன் தனது கிராமத்திலிருந்து 60km தூரத்தில் உள்ள நகரம் ஒன்றிற்குச் சென்றான். அவன் அத்தூரத்தின் $\frac{1}{4}$ இனைப் புகையிரதத்திலும் $\frac{2}{4}$ இனை மோட்டார் சைக்கிளிலும் மீதித்தூரத்தை துவிச்சக்கர வண்டியிலும் சென்றான். மோகன் புகையிரதத்திலும் துவிச்சக்கர வண்டியிலும் சென்ற மொத்தத் தூரம் யாது?

: ..........................................................

26. கூட்டுக. $\frac{1}{2} + \frac{2}{5} =$ ...........................

27. 25 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடிய பாத்திரமொன்றில் 8 லீற்றர் 325 மில்லிலீற்றர் நீர் இருந்தது. பாத்திரத்தை நிரப்ப மேலும் தேவைப்படும் நீர், லீற்றர் மில்லிலீற்றரில் எவ்வளவு?

: .........................*l* ...........................*ml*

28. 1 கிலோகிராம் 750 கிராம் பருப்பு ரூ. 210.00 ஆகும்.

(i) 500 கிராம் பருப்பின் விலை யாது? : ..........................................................

(ii) 500 கிராம் பருப்பினை வாங்குவதற்கு, கடைக்காரரிடம் ரூ. 100ஐக் கொடுத்த போது கடைக்காரர் மேலும் ஒரு தொகைப் பணத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டு ரூ. 50 ஐ மீதியாகக் கொடுத்தார். கடைக்காரர் கேட்டு வாங்கிய பணம் எவ்வளவு?

: ..........................................................

29.




உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப வினாக்களுக்கு விடை தருக.

(i) கொழும்பிலிருந்து சிலாபத்திற்குள்ள தூரம் யாது?

.............. km

(ii) கொழும்பிலிருந்து மங்கள எலியவுக்கு உள்ள தூரம் யாது?

............... km

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. இலங்கைக்கே உரித்தான ஒரு பறவையையும் ஒரு முலையூட்டியையும் முறையே காட்டும் விடை எது?

(1) மயில், மரநாய் (2) நரைப்புழுணி, சேல் கொண்டை

(3) செம்முகப் பூங்குயில், சுண்டெலி (4) வெள்ளைக்கொக்கு, கருங்குரங்கு

31. சூழலுக்கு அழகூட்டவும் மனதிற்கு இதமளிக்கவும் வளர்க்கப்படுவன.
(1) அலங்கார மீன்கள் (2) கோழிகள் (3) பூனைகள் (4) புறாக்கள்

32. சீனாவின் பெல்ஜியம் ஒலிம்பிக் நிகழ்ச்சியின் சின்னமாகப் பயன்படுத்தப்பட்ட பிராணி
(1) பண்டா (2) கங்காரு (3) மயில் (4) காட்டுக்கோழி

33. 
படத்தில் காட்டப்பட்டுள்ள கூட்டினை அமைக்கும் பிராணி,
(1) அணில்
(2) முசிறு
(3) ஊர்க்குருவி
(4) காகம்

34. 
இங்கு காட்டப்பட்டுள்ள தாவரம்,
(1) எலுமிச்சை
(2) இருவேரி
(3) குப்பைமேனி
(4) சதைக்கரைச்சான்

35. பின்வரும் நாடுகளில் இலங்கைக்கு அண்மையில் அமைந்திருப்பது,
(1) ஜப்பான் (2) சீனா (3) மியன்மார் (4) வங்காளதேஷம்

36. 
குறுந்தூர ஓட்ட நிகழ்ச்சி ஒன்றின் புறப்பாடு தொடர்பான இக்கொண்ணிலைக்குரிய கட்டளை எது?
(1) ஆயத்தம் செய் (2) குறிப்பிற்குச் செல்
(3) செல்க (4) வெடியோசை

37. விற்றமின்கள் உடலில் சேர்வதால்,
(1) உடலுக்குச் சக்தி கிடைக்கும் (2) நோய்களில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும்
(3) உடல் வளர்ச்சியடையும் (4) எலும்புகள் பலமடையும்

38. ஊர்வனவற்றை மட்டும் கொண்ட விடை
(1) தவளை, பல்லி (2) கபறகொய்யன், உடும்பு
(3) முள்ளம்பன்றி, தவளை (4) இறால், அணில்

39. இறகுகளால் மூடப்பட்டுள்ள உடலைக் கொண்ட பிராணிகள்,
(1) மைனா, மயில் (2) அணில், மரஅணில்
(3) பூனை, நரி (4) ஆடு, சிங்கம்

40. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடை,
(1) கப்பி - தள்ளுதல் (2) பாக்குவெட்டி - இழுத்தல்
(3) கைவண்டி - தள்ளுதல் (4) திருகாணி செலுத்தி - இழுத்தல்

41. எண்ணெய்யாட்டுதலுக்குப் பயன்படுத்தப்படுவது,
(1) செக்கு (2) பட்டடை (3) துருத்தி (4) வனைசில்லு

42. உலர்மின்கலத்துடன் தொடுக்கப்பட்டுள்ள மின்குமிழை ஒளிரச் செய்வதற்குத் தேவையான இன்னுமொரு பொருள்



(1) இறப்பர்ப்பட்டி (2) வாணிசுத்தாள்
(3) ஈயத்தாள் (4) பலகைத்துண்டு

43. இடியப்பத்தில் அதிகம் அடங்கியுள்ள போசணை
(1) காபோவைதரேற்று (2) புரதம் (3) கொழுப்பு (4) விற்றமின்

44. அரும்பாக இருக்கும் போது பூவைப் பாதுகாக்கும் பூவின் பகுதி
(1) புல்லி (புறவிதழ்) (2) தம்பம் (3) அல்லி (4) சூலகம்

45. சூரியனுக்கு மிகத் தொலைவில் உள்ள கோள்
(1) நெப்டியூன் (2) புதன் (3) வியாழன் (4) யுரேனஸ்

46. புற்றரை ஒன்றின் மீது போடப்பட்டிருந்த மரக்கிளை ஒன்றை, ஒருவாரம் கழித்து அகற்றிய போது மரக்கிளையின் கீழிருந்த புற்கள்,
(1) கடும் பச்சை நிறமாக இருந்தன
(2) மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.
(3) செத்துக் கிடந்தன
(4) ஆரம்பத்தில் இருந்தது போலவே இருந்தன.

47. இலங்கைத் தேசிய இலச்சினையில் காணப்படும் ஒரு பகுதி,
(1) அரச இலை (2) பூவிதழ்கள் (3) பச்சைநிறக்கீலம் (4) சந்திர வட்டக்கல்

48. தேசியக் கொடியில் உள்ள அரச இலைகள் நான்கும் குறிக்கும் பண்புகளில் இரண்டு,
(1) தேசப்பற்று, ஒற்றுமை (2) ஆதரித்தல், விட்டுக்கொடுத்தல்
(3) திருப்தி, பற்றின்மை (4) நீதம், தருமம்

49. பருகுவதற்கு மிக உகந்த நீர்,
(1) வடிகட்டிய நீர் (2) கொத்தாறிய நீர்
(3) கொத்தாறியபின் வடிகட்டிய நீர் (4) குளிரேற்றிய நீர்

50. உணவுக்குச் சுவையூட்டவும், உணவின் தரத்தை மேம்படுத்தவும் பயன்படுத்தும் பொருட்கள் **அல்லாதன**,
(1) கராம்பு, பூலாங்கிழங்கு (2) ரம்பை, கறிவேப்பிலை
(3) பினாட்டு, கோப்பி (4) மிளகு, கடுகு

51. வீட்டில், பாதணிகளைக் கழற்றி வைப்பதற்குப் பொருத்தமான இடம்,
(1) படுக்கையறை (2) சமையலறை
(3) வீட்டு நுழைவாயிலுக்கு அருகில் (4) வரவேற்பறை

52. கதிர்காமப் புனித நகர் அமைந்துள்ள மாகாணம்,
(1) தென்மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) கிழக்கு மாகாணம்

53. நீரில் மிதந்து சென்று பரம்பலடையும் வித்து வகை
(1) எண்ணெய் (2) குன்றிமணி (3) துத்திரி (4) கடல்மாங்காய்

54. நீரில் நன்கு கரையக்கூடிய பொருள்
(1) யூரியா (2) மெழுகு (3) பலாப்பிசின் (4) தார்

55. இலங்கை நாட்டின் வரலாற்றுடன் தொடர்புடைய புனித வெள்ளரச மரம் காணப்படும் இடம்,
(1) சீகிரியா (2) அநுராதபுரம் (3) பொலன்னறுவை (4) மின்னேரியா

56. இலங்கையின் இராசதானிகளில் இரண்டு
(1) தம்புள்ள, மாத்தளை (2) மாத்தறை, காலி
(3) யாப்பகுவ, பொலன்னறுவை (4) அம்பாந்தோட்டை, திருகோணமலை

57. இலங்கை முதன்முதலில் ஒலிம்பிக் பதக்கம் ஒன்றை வென்றது.
(1) 1948 இல் (2) 1952 இல் (3) 2000 இல் (4) 2004 இல்

58. காந்தத்தில் ககவரும் தன்மை அதிகம் காணப்படுவது அதன்,
(1) வடமுனையில் மாத்திரம் (2) தென்முனையில் மாத்திரம்
(3) நடுப்பகுதியில் மாத்திரம் (4) வடமுனை, தென்முனை இரண்டிலும்

59. 

இந்த உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர்
(1) இடையன்
(2) வேட்டைக்காரன்
(3) தென்சிலுவை
(4) சிங்கம்

60. பாடசாலை இல்ல விளையாட்டு விழா பல்வேறு மகிழ்ச்சியான அனுபவங்களைத் தரக்கூடியது. 'போட்டிகளில் பங்கு கொண்ட எனக்குக் கிடைத்த மகிழ்ச்சியான அனுபவம்' என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- ..............................................................................................................................
..............................................................................................................................
- ..............................................................................................................................
..............................................................................................................................
- ..............................................................................................................................
..............................................................................................................................